


# 02-11-1998ல் திறப்பு விழாச் செய்யப்பட்ட

# "சாந்தம் மந்திரின் முகப்பு தோற்றம்"

270.6
ாந்த
SL/PR

ஓம் சாய்ராம்

இலங்கை - வவுனியா

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்

# "சாந்தம்"

## புதிய மண்டபத் திறப்பு விழா சிறப்பு மலர்

02– நவம்பர் –1998


Sri Lanka - Region - XV
Vavuniya.
Tel : 024-22492

**Bhagavan Sri Sathiya Sai Seva Centre**

**" SHANTHAM "**

Opening Ceremony Suvenior
2nd November 1998

**35694**



யாமிருக்கப் பயம் ஏன்?

உ

## சமர்ப்பணம்

*இலங்கை வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம் தனது 27வது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ள இவ்வேளையில் அடியவர்களாகிய நாம் புதிய மந்திராகிய "சாந்தம்" கட்டிடத்தினை, சாந்தி ஆண்டில், 1998 நவம்பர் 2ந் திகதி அன்று திறப்புவிழாச் செய்வதில் ஆனந்தமடைகின்றோம். இத்தினத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு விழா மலரினை பகவான் பாபாவின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிப்பதில் பேரானந்தம் அடைகின்றோம்.*

2-11-1998

*வணக்கத்துடன், சாயிசேவையில்*
*தலைவரும்,*
*அங்கத்தவர்களும.*

### " SUBMISSION"

***Vavuniya Bhagavan Sri Sathiya Sai Seva Centre of Sri Lanka when completing it's 27th year Inauguration, the devoties of Vavuniya Bhagavan Sri Sathiya Sai Centre are happy to celebrate the Opening of the newly Inaugurated Manthir "Shantham" on Monday 2nd November 1998. We are happy to submit the Opening day Souvenir of the New Manthir, published on this day to the Lotus feet of Bhagavan Baba.***

***With Devotion in Sai Service***
***Chairman & Members***

*2.11.1998*

*நாளை என்பது நம் கையிலில்லை. நல்லவை நினைத்தால், அக்கணமே அவைகளைச் செய்யத் தொடங்குக. - பாபா -*



புதிய மந்திரின் முகப்பில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள
விநாயகர் விக்கிரகம்



வவுனியா சத்ய சாயி சேவா நிலையத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட
“சாந்தம்” மந்திரின் எழில் தோற்றம்.

## *My Dears! Accept my Love and Blessings*

*The world to-day is in the grip of a supreme moral and spiritual crisis. People everywhere are feeling frustrated and helpless and anxiously wondering what is in store for humanity. The hopes raised by the advances of seience and technology have proved dupes. While science has overcome the barriers of time, distance and nationality, it has done little to promote better understanding between man and man and nation and nation. Never has there been so much distrust, hatred and violance as is witnessed to-day, in almost every country.*

*Men have forgotten their essentially divine nature and have even failed to observe those basic human qualities which raise them above the level of animals. In the caseless pursuit of material acquisitions and sensuous pleasures, they have forgotten that the real source of happiness and bliss is the discovery of the Atma that is in each of them.*

*There are however heartening singn that earnest people in many countries are turning to the way of the Spirit as the answer to the crisis that faces humanity. There is a spiritual hunger that is growing in every country.*

*Without the conquest of one's passions and desires and without realising the divinity that is immanent in every living thing, man cannot achieve peace, bliss within or harmony with the outside world. The Message of "Fatherhood of God and the Brotherhood of man which Jesus Chirist proclaimed 2000 years ago should become a living faith for the achievement of real peace and the unity of mankind. The oneness of all creation affirmed by the ancient seers and sages must be expressed in a transcendental love which embraces all people regardless of creed. Community or language.*

*This is Sai's Message to you all. May you all develop this Divine Love and stand out as the harbingers of a new age free from selfishness, greed, hatred and violence. Let each of you be a light unto heimself or herself and thereby be a light unto others.*


*There shuold be no differences among devotees in the Sai Organisations. There should be no scramble for power or position . What matters is the purity, intensity and sincerity of the devotion and the spiriot o of selfless sacrifice in which each devotee renders service to the needy and the suffering.*

*Swami is always with you, in you and around you. When all difference are eradicated and devotees in Sai Organisations conduct themselves with selfless devotion, you will all realise that Swami and You are one.*

*With Love*
*Baba*



அவதார புருஷர் பகவான் பாபா, தனது திருக்கரத்தால்
மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கின்றார்.


பக்தர்களை ஆசீர்வதிக்கும் நம் பகவான்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

**இலங்கையிலுள்ள**

**சத்ய சாயி சேவா ஸ்தாபனங்களுக்காக**

## ***பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா***
## ***அனுப்பிய தெய்வீகச் செய்தி***

இலங்கையிலுள்ள சாயி ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 23.04.1979, 28.04.1979 வரை இணைப்புக் குழுவினால் நடாத்திய, சாயி சேவாதள தொண்டர்கள் மற்றும் பாலவிகாஸ் குருமார்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கை நடாத்தும் இவ்வேளையில் அவ்வகுப்புகளில் உரை நிகழ்த்துவதற்கென பகவான் பாபவினால் நியமித்து அனுப்பிவைக்கபட்ட ஸ்ரீ. எல். எஸ். எஸ். சக்கரவர்த்தி மூலம் பகவான் அனுப்பிய தெய்வீகச் செய்தி.

இலங்கையிலுள்ள சத்ய சாயி ஸ்தாபனங்களின் நிர்வாக உத்தியோகஸ்தர்களும், மற்றும் அங்கத்தவர்களும் தங்கள் கடமைகளை ஒழுங்காகவும் பக்தி உணர்வுடனும் கட்டுப்பாட்டுடனும் செய்வார்கள்-என்பது என்னுடைய உண்மையான நம்பிக்கை. இந்தப்பணிகளில் தனிப்பட்ட பொறாமை (அசூசி)க்கு இடமில்லை. எந்தக் கடவுளிடத்திலும் அர்ப்பணிக்கப்படும் எல்லாவிதமான வழிபாடுகளும், செய்கின்ற (நல்லதோ, தீயதோ) செயல்களும் இறுதியாக ஓரே கடவுளைச் சென்றடைகின்றன. (கேசவம் பிரதிகச்சதி) என்பதை மனதிற் கொண்டு ஒவ்வொருவரும் உணர்ச்சி பூர்வமாக தத்தம் கடமைகளைச் செய்யவேண்டும்.

ஸ்தாபனத்தில் பணிக்கப்பட்ட பணியைச் செய்யும்போது அங்கு மற்றவருடைய செயலில், குற்றம் கண்டுபிடிக்கும் இயல்போ, அல்லது அதிவிமர்சன நோக்குடன் அணுகுவதோ இருக்கக் கூடாது. ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் ஓரே இறைவன்தான் இருக்கின்றான் என்பதை ஒவ்வொருவரும் மனதிற் கொள்ள வேண்டும். ஒருவரை புண்படுத்தும்படி மற்றவர் எதையாவது செய்தால் அது இறுதியில் சுவாமியையே சென்றடையும். ஏனெனில் சுவாமி எல்லோரிலும் எல்லாவற்றிலும் அந்தர்யாமியாக வீற்றிருக்கின்றார்.

உங்களுடைய சகல நடவடிக்கைகளிலும் அரசியலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் எல்லாக்காரியங்களிலும் சாதி, மத, இன பேதங்கள் தலையெடுக்கா வண்ணம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். சாயி ஸ்தாபனங்களில் உலகந்தழுவிய அன்புக்கே இடமுண்டு. இதை ஒவ்வொரு உறுப்பினரும் தமது நாளாந்த நடவடிக்கைகளில் நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் சுவாமியை மகிழ்விக்கும். அத்துடன் ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள் ஆத்மீக முன்னேற்றமடையவும் உதவி செய்யும்.

*"ஜெய் சாய்ராம்"*

மொழிபெயர்த்து வெளியீடு செய்பவர்கள்:
ப. ஸ்ரீ. ச. சா. சே. சமித்தி கல்முனை.
மறுபிரசுரம்- ப. ஸ்ரீ. ச. சா சே. நிலையம் - வவுனியா.

*SAI RAM*

**INDULAL . H. SHAH F. C. A**
**" SAI DARSAN"**
**9th ROADS, KHAR**
**BOMBAY - 400052**

## Message from International Chairman.

***When Bhagavan established Sri Sathya Sai Organization in 1965, the paramount objective was to help his devotees follow any or all of these Yogic paths, depending on the nature, temperament and innate ability of those who pursue them. All these paths converge in Sai Organization and for a true spiritual aspirant it provides a unique opportunity to grow and blossom.***

> *My Life is my message*
> *Your Life is my message*
> *-Baba*

# ஆசிச் செய்தி

*ஓம் ஸ்ரீ சாயிராம்*

வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சாயிசேவா நிலையம் "*சாந்தம்*" என்ற பெயரைச்சூட்டி ஒரு புதிய சத்யசாயி பஜனை நிலையம் (மந்திர்) அமைத்து திறப்புவிழா கொண்டாடும் நிலையில் இருப்பதை அறிந்து நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மகிழ்ச்சியிலே எனது (அகங்காரத்துக்கும்) ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சி உண்டு. வவுனியாவில் நான் கடமையாற்றியபோது எனது வீட்டில் சுசெற்றுக்களின் உதவியுடன் முதன்முறையாக நிலையம் பஜனையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது வெள்ளி விழாவும் பூர்த்தி செய்து இரண்டு வருடங்களின் பின்பு இன்னுமொரு பெரிய விழாவும் நடக்க இருக்கிறது.

இந்த நிலையம் சென்ற 27 ஆண்டுகளாக வளர்ந்து கொண்டு வருவதற்கு பல தலைவர்களும் அதற்கு உதவியாக இருந்த நிர்வாகிகளும் சிறந்த தொண்டு செய்திருக்கின்றார்கள். இந்த வரிசையிலே இப்போதிருக்கும் தலைவர் ஸ்ரீ. எஸ். முத்துலிங்கம் அவர்களுக்கு விஷேச இடமுண்டு. இவருடைய காலத்தில் தான் நிலையத்தின் காணி விஸ்தரிக்கப்பட்டது. பல அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. மந்திரும் பூர்த்தியாக்கப்பட்டது.

நிலைய அங்கத்தவர்கள் இந்த வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பை கொடுத்திருந்தார்கள். விஸ்தரிக்கப்பட்ட நிலத்தின் தேவை 2001ம் ஆண்டு தொடக்கம் எல்லோரும் உணர்வார்கள். மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலுள்ள சத்திய சாயி நிறுவனங்களுக்கு வவுனியா ஒரு மத்தியஸ்தானமாக விளங்கப்போகிறது.

இருப்பிட வசதியுடன் பல பயிற்சி முகாம்கள் நடைபெறப்போகின்றன. இதற்கு தற்போது இருக்கும் விஸ்தரிக்கப்பட்ட காணி பெரும் உதவியாக இருக்கும்.

இந்த மந்திரத்தின் கட்டடக்கலை, குறிப்பாக முகப்பு மிகவும் போற்றத்தக்கது. சிற்பாசிரியர் ஸ்ரீ.செ.சிவப்பிரகாசம் அவர்களின் கைவண்ணம் பிரதியட்சமாகத் தெரிகின்றது.

இந்த வேளையிலே வவுனியா சத்யசாயிசேவா நிலையம் 1996 நவம்பர் 23 பிறந்ததின விழாவில் இருந்து இற்றைக்கும் தொடர்ச்சியாக ஒவ்வொருநாளும் செய்யும் சிறுபிள்ளைகளுக்கு அளித்துவரும் இலைக்கஞ்சி போஷாக்குத்திட்டம் நிலையங்களின் சேவைக்கு அருமையான முன்மாதிரி என்று எடுத்துக்கூற விரும்புகிறேன். எல்லா நிலையங்களும் பகவான் பாபவினுடைய 75வது ஜெயந்தி விழாவிற்கு முன்பு இதைப்போன்ற தேவைக்கேற்ப மாறுபட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக சுவாமியினுடைய ஒரு போதனையை நினைவூட்ட விரும்புகின்றேன்.

எங்களுடைய மதிப்பீடுகள் கட்டடங்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. சாயி பக்தர்களுடைய அன்பு, தியாகம், பக்தியிலேயே, எங்களுடைய ஆத்மீக முன்னேற்றம் நிறைவு பெறுகின்றது.

இலங்கை வாழ் சாயி பக்தர்களுடைய எதிர்பார்ப்புகள் சாந்தி ஆண்டில் நிறைவேறுவதற்கு இந்த மந்திர் பலமுள்ள ஒரு கருவியாக மிளிரவேண்டுமென்று பகவானின் ஆசியை வேண்டுகின்றேன்.

*செ.சிவஞானம்*
*மத்திய இணைப்பாளர்.*
*பிராந்தியம் - 15, இலங்கை.*

*அயல் நாட்டு மோகமென்னும் பாசி, நம் நாட்டுப் பண்பாடு என்னும் குடிநீரை மூடிக் கொண்டிருக்கிறது. - பாபா -*

## ஓம் சாயிராம்
## பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்.
## வவுனியா

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாயி சேவா நிலையம் வவுனியா மாவட்டத்தில் சென்ற கால் நூற்றாண்டுக்கும் மேலாக சாயி பகவானின் அருட்பணிகளை மேற்கொண்டு செயலாற்றி வருகிறது. அன்பும், அகிம்சையும், அறனும், நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கும், பகவானுடைய போதனைகளை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கும் ஒரு சிறந்த நிறுவனமாக இயங்கி வருவது பெருமைக்குரியதொன்றாகும்.

1971ம் ஆண்டு அகில இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுத்தலைவர் திருவாளர். செ. சிவஞானம் அவர்களால் முதன்முதலாக இந்நிலையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடக்கத்தில் 15 பக்தர்களுடன் மட்டுமே ஒரு தனியார் இல்லத்தில் சாயி பஜனைகளை நடத்திவந்த இச்சிறு நிறுவனம், காலப்போக்கில் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினால், 1980ம் ஆண்டு வவுனியா நகரசபை மண்டபத்தில் 50 சாயி அடியார்களுடன் இயங்கி வந்தது. வவுனியா நகரின் சுற்றுபுறமுள்ள கிராமங்களுக்கும் இந்நிறுவனத்தின் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டன. முக்கியமாக சாயி நிறுவனங்கள் இல்லாத இடங்களில் மக்களுக்கு போதனைகளைப் புகட்டி, சேவை செய்வதிலும் ஈடுபட்டார்கள் இந்நிலையத்தின் பக்தர்கள்.

1971ம் ஆண்டு நிலையம் ஆரம்பித்த காலத்தில் இருந்து அங்கு சென்று அடியார்களை சந்தித்து, அவர்களுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் எனக்கு அடிக்கடி கிடைத்தது. அன்றுதொட்டு இந்நிலையத்தின் முன்னேற்றமும் அங்குள்ள அங்கத்தவர்களின் மக்கள் சேவையினையும் அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன், பாராட்டுகின்றேன்.

தற்போதைய மண்டபம் அமைந்துள்ள நிலப்பரப்பு 1983ல் அரசாங்கத்தினால் இந்நிறுவனத்திற்கு மானியமாக வழங்கப்பட்டது. இதில் ஒரு தற்காலிக மண்டபம் அமைத்து, அங்கு பஜனை, கூட்டுப்பிரார்த்தனை ஆகியன நடைபெற்றன. மேலும் அடியவர்களின் விடாமுயற்சியினால் சுற்றாடலில் உள்ள பொது மக்களுக்கு, முக்கியமாக ஏழைக் குடும்பங்களுக்கு (முதியோர், ஊனமுற்றோர், நோயாளிகள், சிறுவர்கள்) அளப்பரிய சேவை செய்து வந்தார்கள். உணவு, உடை, மருத்துவம் ஆகிய துறைகளில் இந்நிலையத்து அன்பர்கள் ஆற்றும் தொண்டு பாராட்டுக்குரியதாகும். அண்மைக்காலத்தில் வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து ஆயிரக்கணக்கில் மக்கள் வவுனியா நகர அகதிமுகாம்களில் தங்கி இருக்கின்றார்கள். இந்த முகாம்களுக்கும் இந்நிலையத்து அன்பர்கள் சென்று மக்களுக்கு ஆகவேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து முக்கியமாக இலைக்கஞ்சி என்று சொல்லப்படுகின்ற மிகவும் சத்துமிகுந்த உணவை அன்பர்கள் தாமே செய்து மக்களுக்கு பரிமாறுகிறார்கள். இது எல்லோராலும் வரவேற்கத்தகுந்த ஒரு முக்கிய சேவையாகும்.

காலப்போக்கில் ஓர் உறுதியான, நிரந்தரமான ஓரளவு பெரிதான மண்டபம் ஒன்று இந்நிலையத்திற்கு அவசியம் தேவை என்று சாயி அன்பர்கள் மனதில் தோன்றியபடியால், தற்போதைய ''சாந்தம்'' என்ற பிரார்த்தனை மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. இம்மண்டபம் பகவானின் ஆசீர்வாதத்துடனும், அமைதியுடனும் கட்டியெழுப்பப்பட்டது. இம்மண்டபம் கட்டப்படுவதற்கு இந்நிலையத்தின் தற்போதைய தலைவர் திருவாளர். சி. முத்துலிங்கம் அவர்களின் விடாமுயற்சியும், அயராத உழைப்புமே காரணகர்த்தாவாக இருந்தது என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகின்றேன்.

இந்நிலையத்து சாயி அன்பர்கள் மென்மேலும் ஆர்வத்துடனும், ஊக்கமாகவும் பகவானின் சேவைப் பணிகளைக் கொண்டு நடத்தவும, அவரின் போதனைகளை மக்களிடையே பரப்புவதற்கும் முன்நின்று இயங்குவார்கள் என்பது எனது நம்பிக்கையும், விருப்பமுமாகும்.

எனவே, இந்நிலையத்தின் தலைமையைத் தாங்கி, அதனை முன்னெடுத்துச் செல்லும் திருவாளர். சி முத்துலிங்கம் அவர்களுக்கும் மற்றும் அடியவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் மனப்பூர்வமாக தெரிவிக்க விரும்புகிறேன். நிலையத்து சேவைகள் மென்மேலும் சிறப்புற நடைபெற வேண்டுமென்று பகவானை மனதார பிரார்த்தித்து, அவரின் தாமரை மலர்ப்பாதங்களில் இவ்வாசிச் செய்தியை சமர்ப்பிக்கிறேன்.

*''ஜெய் சாயி ராம்''* *என்றும் சாயி*
*சேவையில்*

*மு. வன்னியசேகரம்*
*தலைவர் மத்திய குழு.*
*ஸத்ய சாயி சேவா ஸ்தாபனங்கள்.*
*இலங்கை பிராந்தியம் -15.*

## *கொழும்பு பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி தலைவர்*
### *வைத்திய கலாநிதி சி.ஜெகநாதன் அவர்களின்*
### *ஆசியுரை.*

சரித்திரப் புகழ் பெற்ற வன்னி மாவட்டத்தின் தலை நகரமாம் வவுனியாவில் சாந்தஸ்வருபனின் திருநாமத்தில் மிகவும் அழகிய தோற்றத்தில் அமைக்கப்பட்டிருக்கும் "சாந்தம்" என்ற சாந்தி நிலையத்தின் திறப்புவிழாவை வர்ணிக்கும் முகமாக இந்த ஆசிச்செய்தியை வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

1991ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ம் திகதி புட்டப்பர்த்தியில் பகவான் பாபா கொழும்பு சமித்திக் குழுவினருக்கு கொடுத்த "சம்பாசனை" எனக்கு ஞாபகத்தில் வருகின்றது. கொழும்பு சமித்தியின் "மந்திர்" திறப்புவிழாவிற்கு பகவானின் ஆசிவேண்டி சென்றிருந்த பொழுது "எங்கே உங்கள் மந்திர்" என்று சுவாமி வினாவி தனது வலது திருக்கரத்தை நெஞ்சில் பதித்து "இங்கே தான் உங்கள் மந்திர்" இதயமே மந்திர் எனப் பதிலும் பகர்ந்தார்.

மனிதனுக்கு சாந்தம் அவனது இதயத்திலேயே அமையவேண்டும். இருப்பினும் பகவானை போற்றிப் பாடவும், அவருடைய போதனைகளைப்பற்றிய சத்சங்கங்கள், இல்லாவிட்டால் சேவைகள், மற்றும் ஏனைய விடயங்கள் நடாத்துவதற்கும் பொது நிலையம் ஒன்று அவசியமாகிறது. வன்னிமாவட்டத்தின் இத்தேவையைப் பூர்த்திசெய்யும் வண்ணம் "சாந்தம்" உருவாகியிருக்கிறது.

பகவானின் கிருபை, திருவாளர் சி. முத்துலிங்கம் ஐயா அவர்களின் திருமுயற்சியாகப் பிரதிபலித்து இக்கட்டிடம் அமைந்திருக்கின்றது. இம்மன்றத்தின் அழகிய தோற்றம் புட்டர்பத்தியில் அமைந்திருக்கும் பிரசாந்தி நிலையத்தின் சிற்பகலையுடன் ஓரளவு ஒத்திருப்பது போற்றற்குரியது. இதன் காரணத்தால் இன்று இலங்கையில் உள்ள ஏனைய மன்றங்களைவிட மிகவும் அழகாக உயர்ந்திருக்கிறது எனப் பெருமைப்படலாம். சத்தியம், சிவம், சுந்தரம், சாந்தம் என்ற பதத்தில் "சத்தியம்" பம்பாயிலும் "சிவம்" ஹைதராகபாத்திலும், "சுந்தரம்" சென்னையிலும் அமைந்திருப்பது போல் "சாந்தம்" வவுனியா நகரில் அமைந்திருப்பது இலங்கை வாழ் மக்களுக்கும் உலகத்தாருக்கும் சாந்தியை கொடுக்கவல்ல ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இன்றைய இத்திறப்பு விழா ஒரு சிறப்பு விழாவாகவும் அமைந்திருக்கின்றது. "சாந்தம்" இன்றும் என்றும் வருவோருக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுக்கவேண்டுமென நல்லாசி கூறி நல்வாழ்த்து வாழ்த்துகின்றேன்.

*"சாயிராம்"*

22, பான்ஸ் பிளேஸ்,
கொழும்பு - 07.

> *ஆன்மீகம் என்பது ஒரு உயர்ந்த செடி.*
> *அதை கட்டுப்பாடு என்னும் வேலியிட்டே*
> *காக்கவேண்டும்.* - பாபா -



சாந்தி ஆண்டில் "சாந்தம்" திறப்பு விழாவையிட்டு
சாந்தமே உருவாக காட்சி தரும் சாந்தஸ்வரூபன்.

ஓம் சாயிராம்
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்,
வவுனியா.

# "சாந்தம்" புதிய மந்திர் அமைந்த வரலாறு

இலங்கையில் சாயி ஸ்தாபனங்களின் மத்திய இணைப்பாளராக தற்போது இருக்கும் ஸ்ரீ. செ. சிவஞானம் ஐயா அவர்கள் வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றிய வேளையில் வைரவபுளியங்குளம் வைரவர் கோவில் வீதியிலுள்ள அவர்களது இல்லத்தில் 1971ம் ஆண்டு இந்நிலையமானது ரேப்றெக்கோடர். கசட் மூலம் பஜனை ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின் சிறிது காலம் ஸ்ரீ. மு. நடராஜா அவர்களின் இல்லத்திலும் மற்றும் பக்தர்களின் இல்லங்களிலும் பஜனைகள் நடாத்தப்பட்டு வந்தன.

1980ம் ஆண்டளவில் வவுனியா நகரசபை மண்டப மேல்மாடிக்கட்டிடத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் பி.ப. 6.00 மணியிலிருந்து பி.ப 7.00 மணிவரை பஜனை நடாத்தப்பட்டு வந்தது. அவ்வாண்டிலிருந்து கல்விவட்டம், பாலகவிகாஸ் வகுப்புகள், சேவைகள் ஆகியன திறம்படச் செயற்பட்டு வந்தன..பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்தது.

இந்நிலையத்தின் செயற்பாடுகளை அவதானித்துக்கொண்ட அப்போது கடமை புரிந்த நகரபிதா ஸ்ரீ. ஐ. கேதீஸ்வரன் அவர்கள் தனித்து ஒரு காணியில் கட்டடம் அமைத்துக் கொண்டு செயற்படுங்கள் என எங்களை ஊக்கப்படுத்தியதுடன் எங்கள் தேவையை அப்போதைய அரசாங்க அதிபருக்கும் எடுத்துக் கூறினார். அந்நேரத்தில் இருந்து சாயி சமித்தி நிர்வாகம் காணித்துண்டு ஒன்று தரும்படி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்தது.

அப்போது அரசாங்க அதிபராகவிருந்த திருவாளர் கே. சீ. லோகேஸ்வரன். மேலதிக அரசாங் அதிபர் திரு. கே. பி. சிறிவர்த்தன, திட்டமிடற் பணிப்பாளர் திரு. ரீ. இலங்காநேசன் ஆகிய மூவரும் ஒன்றாகக் கூடிவந்து தற்போது சமித்தி இயங்கிவரும் காணியைத் தெரிவு செய்து எமக்கு வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு தைப் பூசதினத்தினத்தில் இக்காணியில் பஜனை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது. தற்போதய பஜனை மண்டபம் அமைக்கப்பட்டு 1983ம் வருடம் ஜூலை மாதம் 12ம் திகதி ஸ்ரீ. செ. சிவஞானம் ஐயா அவர்களினாலே திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்நிலையம் தனது சேவைகளை விஸ்தரித்தது. பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டது. இச்சமயத்தில் புதிய மந்திர் அமைக்க வேண்டுமென பக்தர்கள் விரும்பினார்கள். சுவாமி அனுமதி தந்தால் செய்யலாமென சமித்தி நிர்வாகம் தெரிவித்தது.

இதன் பின்னர் "சாந்தம்" என்ற பெயர் கொண்ட இப்புதிய மந்திர்க்கான கட்டட வரைபடமொன்று தயாரிக்கப்பட்டு அதை அடியேன் எடுத்துக்கொண்டு 1985 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் சுவாமியிடம் சென்றேன். அப்பொழுது சுவாமி ஊட்டியில் தங்கியிருந்தார். 1985.04.18ம் திகதியன்று காலைநேர தரிசனத்தில் அதாவது மு.ப. 9.00மணி 10நிமிடமளவில் எனது அருகில் வந்து சுவாமி வரைபடத்தை தொட்டு ஆசீர்வதித்தார். அன்று மாலைநேர பஜனையின்போதும் சுவாமி எனதருகில் வரும் சமயம் இவ்வரைபடத்தை நீட்டினேன் அப்போது சுவாமி "காலையில் பார்த்தாயிற்றே" என்று கூறிச்சென்றார். அது எனக்கு மிகுந்த ஆனந்தமாயிற்று.

பின் 1985.04.19ம் திகதி சுவாமி கோடைக்கானல் சென்றார். யானும் அங்கு சென்றேன். 1985.04.19ம் திகதி அங்கு "சாயிஸ்ருதி" என்ற புதிய பஜனை மண்டபம் சுவாமியால் திறந்து வைக்கப்பட்டது. மறுநாள் அதாவது 1985.04.20ம் திகதி காலைத் தரிசனம் முடிய சுவாமி "நேர்முகச்சந்திப்பிற்கு" (இன்ரவியூ ) அழைத்தார். புதிய அறையில் முதன் முதல் சுவாமியை சந்திக்கும் அதிஷ்டம் கிடைத்தது. நேர்முகப் பேட்டியின் போது சுவாமியிடம் " புதிய கட்டிடம் எப்படி கட்டுவது" எனக் கேட்டேன் " நீயே கட்டு" என சுவாமி கூறினார். அப்பொழுது நான் எப்படி சுவாமி கட்டுவது எனக் கேட்டேன். அப்பொழுது " நீயே கட்டு கட்டலாம்" எனக் கூறினார். இந்த ஆசி உந்துதலே என்னைச் செயற்படத் தூண்டியது.

பின் அடியேனும் ஸ்ரீ. ஆ. சபாநாதன் அவர்களும் புட்டபர்த்தி சென்ற போது சுவாமி எம்மிடமிருந்த வரைபட பிரதியையும், மதிப்பீட்டு அறிக்கையையும் பெற்று ஆசீர்வதித்தார். 1991ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் அடியேனும் அப்போதைய தலைவர் ஸ்ரீ. தா. இராசேந்திரம் ஐயா அவர்களும் கோடைக்கானலில் சுவாமியிடம் தரிசனத்திற்கு இருந்தோம். ஒரு தாம்பாளத்தில் அத்திவாரத்திற்கு இடப்படுவதற்கான பொருட்களையும் கொண்டு சென்று வைத்திருதோம். 1991. 04 .18ம் திகதி காலை தரிசனத்தில் சுவாமி எம்மிடம் வந்து தாம்பாளத்தில் வைத்திருந்த பொருட்களைத் தொட்டு ஆசீர்வதித்து இருவரின் தலையிலும் அட்சதையிட்டுப் பின்னர் ரொபியை அள்ளி எல்லோருக்கும் வீசினார் நாம் அளவிலா ஆனந்தம் பெற்றோம்.

1992, மே மாதம் "வைட்பீல்" சென்றிருந்தோம். அடியேனும், "சிவசக்தி" உரிமையாளர் ஸ்ரீ. ந. சண்முகராசாவும் புதிய கட்டடத்தின் முன் பதிக்க வேண்டிய பெயர் வெட்டிய கல்லை வைத்துக்கொண்டிருந்தோம். 1992.05.06 ஈஸ்வராம்பா தினத்தன்று காலை தரிசனத்தில் முதல் முறையாக எம்மிடமே வந்து கல்லைத் தொட்டு ஆசீர்வதித்து "ரொபி" அள்ளி வீசி எமக்குப் பாத நமஸ்காரமும் தந்தார்.

சுவாமியின் அனுக்கிரகத்தினால் 1992.06. 11 வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு சுப நேரத்தில் அத்திவாரம் இடப்பட்டது. அப்போதைய அரச அதிபர் ஸ்ரீ எஸ். தில்லை நடராஜா, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். எஸ் நவரட்ணராஜா, சமித்தி அங்கத்தவர் ஸ்ரீ. ஆ. சபாநாதன் ஆகியோர் அத்திவாரப்பொருட்கள் வைத்த பின் எல்லா அங்கத்தவர்களும் பங்கு பற்றி "நாட்" கல்லு வைத்தார்கள். அதைத் தொடர்ந்து கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த மந்திர்க்கு "சாந்தம்" என பெயர் வைக்க ஆசீர்வதிக்கும்படி சுவாமியிடம் மூன்று முறை கடிதம் எழுதிக் கொடுத்தேன். அதையும் வாங்கி ஆசீர்வதித்தார். எனவே சாந்தம் எனப் பெயர் வைக்கப்பட்டது. சுவாமியின் பம்பாயிலுள்ள மந்திர், தர்மசேத்திரம் "சத்யம்" எனவும், கைதராபாத்தில் அமைந்துள்ளது மந்திர், "சிவம்" எனவும், சென்னையில் அமைந்துள்ள மந்திர், "சுந்தரம்" எனவும், அழைக்கப்படுகிறது. இவ்வரிசையில் இலங்கையில் வவுனியாவில் அமைந்துள்ள இம் மந்திர் "சாந்தம்" என அழைக்கப்படுவதே மிகப்பொருத்தமாகும். சாந்தி ஆண்டான 1998ல் "சாந்தம்" திறந்து வைக்கப்படுதே சுவாமியின் சங்கற்பம். "சாந்தம்." திறந்துவைக்கப்படுவதுடன் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென பிரார்த்திப்போமாக.

1997 ஏப்பிரல் கோடைக்கானலில் சுவாமி இருந்தார். அங்கு சென்றேன். மூலஸ்தானத்திற்கு பிரதிஷ்டை செய்யும்படியாக சுவாமியினதும் சீரடியினதும் இருபடங்களையும் ஒரு சாயி பக்தை வாங்கி எம்மிடம் தந்தார். நான் அதை தரிசன நேரங்களில் வைத்துக்கொண்டிருப்பேன். 1997.04.22 காலை சரியாக 8.10 மணிக்கு சுவாமி வந்து தனது வலக்கரத்தைப் பதிந்து ஆசீர்வதித்தார். அந்நேரம் பக்கத்தில் திருவாளர் செ. இராசதுரை (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்) ஐயா அவர்களும் இருந்து வாழ்த்தினார்.

1998 ஜூலை மாதம் குரு பூர்ணிமை தினத்திற்காக புட்டபத்தி சென்றிருந்தேன். என்னுடன் கல்வி வட்ட நிர்வாகி ஸ்ரீ. க. சிவபாதவிருதயரும் வந்திருந்தார். அந்நேரத்தில் திறப்புவிழா சம்பந்தமான கடிதங்களைக் கொடுக்க வைத்திருந்தேன் தரிசன நேரத்தில் அதாவது 1998.07.05ம் திகதி (ஆடி ஏகாதசித்தினம்) காலை 7.00 மணிக்குத் தரிசனம் தருவதற்கு வந்த சுவாமி முதன் முதல் எமது கடிதத்தை தொட்டு ஆசீர்வதித்தார். பின் 1998.07.08ம் திகதி காலை திறப்புவிழா திகதிக்குரிய கடிதத்தையும் வாசல் வளைவுப் படத்தையும் வாங்கி எடுத்து ஆசிர்வதித்தார். 21.08.98ல் புட்டபர்த்தி சென்றிருந்தேன். 22.08.98 காலை தரிசனத்தில் சுவாமி என்னிடம் வரும் போது விநாயக விக்கிரம் ஸ்தாபிப்பதற்குரிய இயந்திர தகட்டைக் கையில் வைத்திருந்தேன். அதை வலது கரம் பதித்து ஆசீர்வதித்தார்.

இவ்விதமாக ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக சுவாமியின் ஆசீர்வாதத்துடனே இம்மந்திர் கட்டிமுடிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டம் கட்டமாக கட்டி முடிக்க அதற்கான படங்களை எடுத்து சுவாமிக்கு கொடுத்து வந்துள்ளேன் சுவாமியின் ஆசீர்வாதத்தினால் எல்லா பக்தர்களும் மனம் உவந்து தந்த நன்கொடை மூலம் இவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன.

*சாயி சேவையிலுள்ள*
*சி. முத்துலிங்கம்*
*நிலைய தலைவர்*

---

*மானுட சேவையே மாதவ சேவை என்னும்*
*மந்திரத்தை மறவாது நடந்தால்,*
*மகாதேவனே மகிழ்வான்.* — பாபா —



1985 எப்பிரல் 20ந் திகதி பகவான் பாபா, ஸ்ரீ. சி. முத்துலிங்கத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்முகப் பேட்டியின் போது
"சாந்தத்தை நீயே கட்டு" என அன்புடன் கூறி ஆசிர்வதித்தர்.



வவுனியா சாயிசேவா நிலையத்தின் பழைய பஜனை கட்டடமும்
“சாந்தம்” அமைந்துள்ள காணியும்.



“சாந்தம்” மந்திருக்கான அத்திவாரம் இடுவதற்கான
பூமி பூசை, 11-06-1992 இல் நடைபெறுகிறது

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



"சாந்தம்" 1992 இல் புதிய மந்திருக்கான அத்திவாரம் இட்டபின் அப்போதைய வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. *S.S.* நவரட்ணராஜாவும் பாரியாரும் முதலாவதாக நிதியை வழங்கி கட்டிட நிதியை ஆரம்பித்து வைத்தல்.



சமித்தியில் பிரதிஷ்டை செய்வதற்காக, புட்டபர்த்தியில் பாதபூசை செய்து, தலைவரினால் எடுத்து வரப்பட்ட பகவானின் பாதுகை.




11.6.1992ல் அப்போதய வவுனியா அரசஅதிபர் திரு. எஸ். தில்லைநடராஜா அவர்களால் அத்திவாரம் இடப்பட்ட காட்சி



ஸ்ரீ.ஆ.சபாநாதன் அவர்களால் அத்திவாரம் இடப்படும் காட்சி



1993இல் இசையமைப்பாளர் ஸ்ரீ. எம். எஸ். செல்வராஜா அவர்களினால் பஜனைப்பயிற்சி வழங்கப்பட்டு பஜனை நடைபெறும் காட்சி



1983 இல் முதலாவது நகரசங்கீர்த்தனம் நடைபெற்ற காட்சி

BHAGAVAN SRI SATHYA SAI SEVA CENTRE OF VAVUNIYA
OUR ORGANIZATION - 1998

# Executive Committee

## Office Bearers

| | | |
|---|---|---|
| *President* | : | *Sri. S. Muthulingam* |
| *Vice President* | : | *Dr. S.Sinnadurai* |
| *Secretary* | : | *Dr. S.Anushyanthan* |
| *Joint Secretary* | : | *Sri. S. Nadarajah* |
| *Treasurer* | : | *Sri. T. Thambithurai* |
| *Spiritual Co-ordinator* | : | *Smt. S. Thambithurai* |
| *Study Circle Convenor* | : | *Sri. S. Sivapathaviruthayar* |
| *Bhajan Convenor* | : | *Sri. V. Senthinathan* |
| *Sevadhal Coordinator* | : | *Sri .N. Vivekanandan* |
| *Sevedhal Convenor-Male* | : | *Sri. M. Mahadevan* |
| *Sevedhal Convenor-Female* | : | *Smt. N. Sellathurai* |
| *Education Coordinator* | : | *Selvi. Nadarajah Shanthiny* |
| *EHV Coordinator* | : | *Sri. S. Sivapathaviruthayar* |
| *Youth Coordinator* | : | *Smt. Suganthini Vimalachandran* |
| *Youth Leader -Male* | : | *Sri. S. Niruthan* |
| *Youth Leader- Female* | : | *Selvi. Kandiah Jayanthiny* |

## Members

*Sri. T. Rajendram*
*Sri. A. Sabanathan*
*Sri. K. Subramaniya Iyar*
*Sri. V. Thankavadivel*
*Sri. S. Velupillai*
*Sri .G. Kailainathan*
*Sri. K. Sabaratnam*
*Sri. P. Balakumar*
*Sri. P. Rajaratnam*
*Sri. S. Ragunathapillai*
*Sri. S. Yogalingam*
*Sri. P. Shanmuganathan*

## வவுனியா பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சேவையாற்றிய தலைவர்கள்

1. *ஸ்ரீ.எஸ். சிவஞானம்*
2. *ஸ்ரீ. மு. நடராஜா*
3. *டாக்டர். ஸ்ரீ. எஸ். இராஜதுரை*
4. *ஸ்ரீ. ஆ. தியாகராஜா*
5. *டாக்டர். ஸ்ரீ. எஸ். நிரஞ்சன்*
6. *ஸ்ரீ. சு. மயில்வாகனம்*
7. *டாக்டர். எஸ். சின்னத்துரை*
8. *ஸ்ரீ. தா. இராசேந்திரம்*
9. *ஸ்ரீ. சி. முத்துலிங்கம்*

## வவுனியா பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சேவையாற்றிய செயலாளர்கள்

1. *ஸ்ரீ. சு. நிக்லஸ்*
2. *ஸ்ரீ. இ. பாஸ்கரன்*
3. *ஸ்ரீ. ரி. தங்கராஜா*
4. *ஸ்ரீ. எஸ். வி. சண்முகம்*
5. *ஸ்ரீ. எஸ். வேலுப்பிள்ளை*
6. *ஸ்ரீ. ச. புஷ்பராஜா*
7. *ஸ்ரீ. சி. முத்துலிங்கம்*
8. *ஸ்ரீ. சி. இரகுநாதபிள்ளை*
9. *டாக்டர். சி. அனுஷ்யந்தன்*

## வவுனியா பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சேவையாற்றிய பொருளாளர்கள்

1. *ஸ்ரீ. எஸ். ராஜா*
2. *ஸ்ரீ. க. பாலதயாநந்தன்*
3. *ஸ்ரீ. தா. இராசேந்திரம்*
4. *ஸ்ரீ. க. பொன்னம்பலம்*
5. *ஸ்ரீ. பொ. செல்வஜெயம்*
6. *ஸ்ரீ. தி. சிவகரன்*
7. *ஸ்ரீ. த. தம்பித்துரை*

## வவுனியா பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சேவையாற்றிய மகிளா தலைவிகள்

1. ஸ்ரீமதி. ஞா. இராஜதுரை
2. ஸ்ரீமதி. ம. நடராஜா
3. ஸ்ரீமதி. இ. மதியாபரணம்
4. ஸ்ரீமதி. எஸ். தியாகராஜா
5. ஸ்ரீமதி. சு. தம்பித்துரை

## வவுனியா பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சேவையாற்றிய மகிளா செயலாளர்கள்

1. ஸ்ரீமதி. இ. மதியாபரணம்
2. ஸ்ரீமதி. க. நிக்லஸ்
3. ஸ்ரீமதி. சு. தம்பிதுரை
4. ஸ்ரீமதி. எஸ். அமிர்தானந்தம்
5. ஸ்ரீமதி. எஸ் பரமநாதன்
6. செல்வி. சி. லலிதா
7. ஸ்ரீமதி. ம. இராசரத்தினம்.

*இறைவன் மேல் பாரத்தைப் போட்டு*
*கடமையை மறக்காதே. மாட்டுக்காரன் மேய்சல்*
*காட்டுக்கு ஓட்டித்தான் போவான்.*
*மேய வேண்டியது மாடுதான் - பாபா -*

# சாயி பணியின் வளர்ச்சிக்கு எம் நல்வாழ்த்துக்கள்

"ஆண்டவன் ஒருவர் இருக்கின்றார்" அவர் ஒவ்வோர் உயிரின் இதயக் கமலத்திலும் வீற்றிருக்கின்றார். தன்னைத் தானே உணர்ந்து, தன் நிலையைப் புரிந்து, அடுத்தவர் மனதின் பரிபக்குவத்தை, உண்மையின் விழிப்பாட்டை அன்பு வழியில் காண்பார்கள். சத்திய சாயி தெய்வத்தின் குறிக்கோளான எம்மதமும் ஓர் மதமே என்னும் இலட்சிய வாழ்வை பூரணப்படுத்திக் கொள்வர்.

வாழ்வின் பூரண ஆத்ம திருப்தி எங்கே பிறக்கிறது? எங்கே தவழ்கிறது? எங்கே முடிகிறது? என ஆராய்ந்து பார்த்தால, சாயி தத்துவத்தின் அன்பு அறிவகத்தில், மூழ்கிய முத்தின் பிரதிபிம்பங்களாக சுடர்விடும் அன்பு பக்தர்களேயாகும். உலகலாவிய ரீதியில் இன்றுவியாபித்திருக்கும் சத்யசாயிபாபாவின் எண்ணக்கருக்களின் ஊடகமான உண்மையான மனிதனை மனிதனாக வாழ வழிசமைக்கும் உத்தம சிற்பிகளான மனித எண்ணம் ஆத்மாவின் மனித சக்தி! ஆத்மீகத்தின் இனிய தென்றலில், என்றும் குளிர் காய்வதே பேரின்பம்!, என்பதை அறிய வைத்த மகாசக்தி!, சாயி சக்தியின்பெரு மகிமையாகும்.

"விஞ்ஞான மேதைகளைத் திகைக்க வைத்த மெய்ஞான சாயிதத்துவங்கள்" என்றும் உயிரோட்டமானது. துன்பத்தில் தவழ்வதும், துரதிஷ்டத்தில் சிக்கித் தவிப்பதும், நோயால் வாடுவதும் "தனது கர்மத்தின் தாற்பரியம்" என வேண்டிக்கொண்டு, மனத்தைரியத்தை தெய்வீகச் சுடருக்குள் இட்டுச்சென்றால் இதுவும் ஓர் நன்மைக்கே என்ற கோட்பாட்டில் "என்பணி புனித பணி" என்நிலை ஆன்மீக வழி, என்சுமை தெய்வத்தின் கட்டளை என வேண்டினால் பனிபோல் கவலைகள் மறையும். "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற நம்பிக்கை கொண்டு "அன்பே சிவம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டில் திளைக்கும் போது அமைதியின் ஆத்மார்த்தமான இன்பச்சுடர் பிரகாசிப்பதை துல்லியமாக எம் இதயம் பிரகாசிப்பதை உணர முடியும்.

"ஓம் தத்புருஷாய வித்மஹே
மகாதேவாய தீமஹி
தந்னோ ருத்ர பிரசோதயாத்"

என உப நிடதம் கூறுகிறது.

எமது வவுனியா மக்களின் உயிரோட்டமான, தத்துவரூபமான சத்திய சாயி மந்திர் எழிலானது, சகல இனமத மக்களையும் ஒன்றினைக்கும் ஓர் தெய்வீகக் கூடமாக மக்களின் உள்ளத்தில் பிரகாசத்தை ஏற்படுத்தி, அமைதியை உரமாக்கி, ஒற்றுமையை பலப்படுத்தி, அன்புவழிச் சிறப்புக்களை உள்ளடக்கி, வியாபித்து நிற்பதற்கு, சத்திய சாயி பாபாவின் அருளே இங்கு ஆரோகணித்து இருக்கின்றது, இன்னல்களில் துவளும் மக்களின் துயர்களைப்போக்கி, ஆத்ம சுத்தியைப் பெற்று " யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனக் கூறி, சாயி வழி அன்பு, தெய்வீக மானுடர்களுக்கும், மாதாஜிகளுக்கும், இளம் சந்ததி, சிறார்களுக்கும் அன்பென்னும் செங்கோலை, மந்திரக்கோலாகவும், அதன் தூய்மைக்கு ஆத்ம சுத்தியை சக்தியின் கடிவாளமாகக் கொண்டு, எமது உள்ளத்தில் குடியிருக்கும் வேதாளத்தை விரட்டி ஒற்றுமையின் சங்கமத்துள் ஒரு மதமாய், ஒரு குலமாய் வியாபித்து பெரு விருட்சமாக ஐக்கியமாகி வன்னி மண்ணைக்காக்க ஒன்றுபடுவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
ஸ்ரீ சத்திய சாயி பாபவிற்கு ஜே ! ஜே!

*அன்புப் பக்தை*
*ஸ்ரீமதி. இராசமனோகரி புலந்திரன்,*
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*வன்னி மாவட்டம்.*

## *பகவான் திருநாமத்தோடு பணிகள் சிறப்புறட்டும்...*

வவுனியா நகரில் புதிதாக நிறுவப்பட்ட "சாந்தம்" மந்திர் திறப்புவிழா சிறப்பாக நடைபெறுவதற்கும் அதனையொட்டி சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவதற்கும் வவுனியா பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம், ஒழுங்குகள் செய்வதறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஒரு இனம், ஒரு மதம் என்று பக்கம் சாராது உலகில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கும், பல்வேறு மதத்தவர்களுக்கும் எதுவித பாகுபாடு இன்றியும் அருள் புரிவதும் அறிவுரை வழங்கி வருவதும் எல்லோரும் அறிந்ததொன்று. சாயி பக்தர்களும் பகவான் திருவருளால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி என்றும் சாந்தியோடும், சமாதானத்தோடும் வாழ விரும்புகின்றனர். வவுனியா பக்தர்கள் ஒன்று கூடி பிரார்த்தனை பஜனை முதலியவற்றில் ஈடுபடுவதற்கு "சாந்தம்" மந்திர் என்றென்றும் உறுதுணையாயிருக்கும்.

பகவானின் திருநாமத்தோடு முன்னெடுத்துச் செல்லும் பணிகள் யாவும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

*எஸ். தில்லைநடராஜா,*
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

---

## ஓம் ஸ்ரீ சாயிராம்

### *ஸ்ரீ. நா. புவனேந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி*

"வவுனியா மாவட்டத்தில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்திக்கென ஒரு அழகிய மண்டபம் "சாந்தம்" என்ற பெயரில் நிர்மாணிக்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய புனித கைங்கரியமாகும். வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் சாயி சேவைகளின் மத்திய நிலையமாக விளங்கப்போகும் இப்புனித மண்டபம் பகவானின் ஆசியுடன் நிறைவேற்றியிருப்பது சாயி அடியார்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியே"

நா. புவனேந்திரன்
செயலாளர்,
பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி - திருகோணமலை
சத்திய சாயி இளைஞர் அணிப்பொறுப்பாளர் - கிழக்குப்பிராந்தியம்

3, உட்துறை வீதி,
திருகோணமலை.
01-09-1998

*நன்றிக்கு நாய்! பொறுமைக்கு கழுதை!*
*முயற்சிக்கு சிலந்தி! சுறுசுறுப்புக்கு எறும்பு!*
*மானத்திற்கு மான்! ஆனால் மனிதன் - பாபா -*

## திரு. க. கணேஷ் - அரச அதிபர் வவுனியா அவர்களின் ஆசிச் செய்தி

வவுனிய ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தியினர் பகவானின் ஆசியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "சாந்தம்" மந்திர் திறப்புவிழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நிலையம் ஆன்மீக பணிகளில் மட்டும் ஈடுபடாமல் சமுதாயப்பனிகளில் தொண்டாற்றி வருவது வரவேற்கக் கூடியதொன்றாகும்.

"கடமை செய் பலனை எதிர்பாராதே" என்று பகவத்கீதையில் ஸ்ரீ கிருஸ்ணர் எடுத்தியம்பியவாறு சாயி நிலையங்கள் செயற்படுவதும் வவுனியா சமித்தியினர் முன்னோடியாக திகழ்வதும் பெருமைக்குரியது. வவுனியா மாவட்டத்தில் இயங்கிவரும் நலன்புரி நிலலையங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் குழந்தைகளின் போசாக்கின்மையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்நிலையத்தால் வழங்கப்படும் "இலைக்கஞ்சி" சேவையும் வரவேற்கக் கூடியதொன்றாகும்.

பகவானின் திருநாமத்துடன்
சேவைப்பணிகள் மென்மேலும் தொடர்ந்து சிறப்புற
எனது நல்வாழ்த்துக்கள்.

கச்சேரி,
வவுனியா.

---

## ஸ்ரீமதி. செல்வி. மேரி ஆன் இமெல்டா (பிரதேச செயலாளர்) வவுனியா அவர்களின் ஆசிச் செய்தி

வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தியினர் "சாந்தம்" என்னும் புதிய பிரார்த்தனை மண்டபத்தை அமைத்து திறப்பதையிட்டு பெருமகிழ்சியடைகிறேன்

இவர்கள் பொன்னாவரசங்குளம் கிராமத்தில் செய்யும் பிடி அரிசி வழங்கல், வைத்தியசேவை, பால்மா சேவை பற்றியும் எமது பிரதேசத்தில் உள்ள அகதி முகாம் சிறுவர்களுக்கான போசாக்கு திட்டத்தின் கீழ் இலைக்கஞ்சி சேவை இரண்டு வருடங்களாக தொடர்ந்து செய்து வருவதையும் நன்கு அறிவேன்.

நிலையத்தின் தொண்டு மேலும் தொடர்ந்து சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல பகவான் அருளாசி வழங்க வேண்டுமென பிரார்த்தித்து என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரதேச செயலகம்
வவுனியா

# ஓம் சாய்ராம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி இறைவனின் திருவுருவமே. அவ்வுருவத்தை பிரதிஸ்டை செய்து "சாந்தம்" என்னும் புதிய மந்திர் இலங்கையில் வவுனியாவில் திறந்து வைப்பதையிட்டு அடியேன் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் சாயிஸ்தாபனம் ஆரம்பித்த காலத்தில் இருந்து ஸ்ரீ சி. முத்துலிங்கத்தின் சாயிசேவையை நன்கு அறிவேன். கல்முனை சமித்தியை உருவாக்கியதுடன் கிழக்கிலங்கையில் பல நிலையங்களை அவர் உருவாக்கியதை அடியேன் அங்கு நேரில் சென்று பார்த்து அகமகிழ்ந்துள்ளேன்.

தற்போது வவுனியாவில் அவர் ஆற்றிவரும் சேவைகளை மத்திய இணைப்பாளர் மூலம் அறிந்து ஆனந்தமடைகிறேன். வவுனியா நிலையம் பல சேவைகளை செய்து வருவதையிட்டு பாராட்டுவதுடன். இந்நிலையத்தின் முன்மாதிரியை பின்பற்றி இலங்கையின் எல்லா பாகங்களிலும் சாயிசேவை சிறப்புற நடைபெறவேண்டுமென பிரார்த்திப்பதுடன் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். தொண்டர்களின் சேவை சிறக்க எனது வாழ்த்துக்கள்.

கு. பாலசிங்கம்
முன்னாள் இலங்கை மாநில தலைவர்,
உலக கவுன்சில் அங்கத்தவர்-சாயிஸ்தாபனங்கள்

கலிபோர்னியா.
அமெரிக்கா.

## தெ. ஈஸ்வரன் மொரீசியஸ் நாட்டுக்கான இலங்கை தூதுவர் அவர்களின் ஆசிச் செய்தி

சத்திய சாயி பகவான் இறைவனின் திருவுருவம். அன்னாரது வாயிலிருந்து வரும் வார்த்தைகள் இறைவனது திருவாய்மொழி. சாயி பகவானது மேனி இறைவனது திரு மேனி. இந்த அன்பின் ஊற்றை. கருணையின் வடிவத்தை. அருளின் பிறப்பிடத்தை. பிறப்பறுக்கும் மகா ஜோதியை. அருளாசியில் மனித குலத்தை வெள்ளமென மூழ்கடிக்கும் தெய்வத்தை. மனித வடிவில் வந்து உலகத்து மக்கள் மனதை எல்லாம் கொள்ளை கொண்டுள்ள. பேருண்மையே! பலகாலம் செய்த பாவமெல்லாம் "போக்கும்" அருமருந்தை. சத்ய சாயி பகவானை வாழ்நாளில் ஐப்பத்து ஒரு தடவை தரிசித்து. பலப்பலமுறை திருமேனி தீண்டி வந்துள்ள திரு. முத்துலிங்கம் ஐயா அவர்களுக்கு நான் அடியேன். நால்வர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனோடு தோழமை பூண்டவர். அவருடைய தேவாரம் நமக்கு வழி காட்டுகிறது.

"பக்தராய் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார்கள் எல்லார்க்கும் அடியேன்
சித்தத்தை சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கும் அடியேன்
முழுத்து பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்"

*திரு. சி. முத்துலிங்கம் அவர்கள் செய்கின்ற நற்தொண்டுக்கு. அன்னாருக்கு நீண்ட ஆயுளையும் நீடித்த சுகத்தையும் தந்து அருளுமாறு பிரார்த்தனை செய்வதை தவிர வேறு ஒன்றும் அறியேன் பகவானே!*

267. செட்டியார் தெரு.
கொழும்பு - 11.

## சாயி சேவையிலுள்ள ஸ்ரீமதி. எஸ். சுந்தரலிங்கம் (தேசிய பாலவிகாஸ் அமைப்பாளர்) அவர்களின் ஆசிச் செய்தி

**சாயிராம்**

இலங்கையின் பல பாகங்களிலும் விஷேடமாக வடக்கிலும், கிழக்கிலும் அமைதி வேண்டி மக்கள் பிரார்த்திக்கின்றார்கள். வன்னிப்பிரதேசம் பல யுத்த இடர்பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. வவுனியா வாழ் மக்கள் நிம்மதியற்று இறைவனே தஞ்சம் என்று பிரார்த்தனை செய்து கொண்டு வாழ்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களுக்கு ஒரு மண்டபம் அமைவதென்றால் அச்செயற்பாட்டிற்கு சாயின் ஆசீர்வாதம் கிடைத்துள்ளதே காரணமாகும் வவுனியா நகரின் மத்தியில் ஓர் அமைதியான சூழ்நிலையில் இக்கட்டடம் அமைந்திருப்பது ஆத்மீக வழிபாட்டிற்கு உறுதுணை செய்வதாகும். "சாந்தம்" என்னும் பெயர் சூட்டப்பட்டு புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தின் ஓர் அங்கம் போன்று காட்சி தருகின்றது. பிரசாந்தியின் பெரும் உணர்வை இங்கு பெற முடிகின்றது. . பிரசாந்தியின் வாசனை பிரசாந்தியின் கட்டட தோற்றப்பாடு ஆகியவற்றை இந்நிலையம் வழங்குகின்றது. சாந்தியைப் பெறவிரும்புகின்றவர்களுக்கு "சாந்தம்" ஆத்மீக மனநிம்மதியை கொடுக்கின்றது.

வவுனியா சமித்தி தனது 27ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்ற நிலையில் இவ்வாறான ஒரு பெரும் அமைப்பை சமித்தி கட்டடக் குழுவினர் அமைத்துள்ளார்களென்றால் அது அவர்களின் மாபெரும் சாதனையின் வெளிப்பாட்டுச் சின்னம் என்றே கூறமுடியும்.

"நீங்கள் ஆரம்பியுங்கள். நான் அதை முடித்துவைப்பேன்" என்ற பாபா அவர்களின் கூற்றுக்கு இலக்கணமாக அமைந்திருப்பது இம்மண்டபத்தொகுதியாகும். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவை நிலையத்தின் பணிகள் ஒவ்வொன்றிலும் பகவானின் ஆசி உண்டென்பதற்கு எடுத்துக்காட்டாக அமைவது பாலவிகாஸ் திட்டத்தில் நிலைநாட்டிய வெற்றிகள் சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வியில் நடைமுறையாக்கும் யுக்திகள். இளைஞர்கள் தெய்வீக உணர்வுடன் ஆற்றும் சேவைத்திட்ட ஒழுங்குகள். ஆத்மீக ஞானத்தை மக்களிடையே பரப்பும் செயற்பாடுகள் ஆகியவைகளாகும். சமித்தி தலைவர் ஸ்ரீ. எஸ். முத்துலிங்கம் அவர்கள் புட்டபர்த்திக்கு ஐம்பது தடவைகள் சென்று பகவானின் ஆசிகளை நிறையப் பெற்றுள்ளார். இக்கட்டட அமைப்பின் ஒவ்வொரு எழுச்சிப்படியும் சுவாமியிடம் காட்டி அருளாசிபெற்று வந்துள்ளார். அவர் பெற்று வந்துள்ள தெய்வீக அருளாசிகள் இக்கட்டிடத்து ஒவ்வொரு கோண அமைப்பிலும் பிரகாசித்துக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். இவற்றிற்கெல்லாம் மேலாக கட்டட அமைப்பு பணிகளை மேற்கொண்ட குழுவினர். பொருள்தந்து உதவியவர்கள். பகவான் பணிகளையேற்று நடத்தியவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். யாவரும் பகவானின் ஆசியை பெற்றவர்கள் என்றே கூறலாம் அவர்கள் அனைவரது ஒற்றுமையையும் மனோதிடத்தையும். அர்ப்பணிப்பையும் கௌரவிக்க வேண்டியது எம் அனைவரது கடமையாகும்.

பகவானின் பணிகளை அவரின் கட்டளை ஒழுங்குப்படி கிரமமாகச் செயற்படுத்துகின்ற நிலையங்களில் முதன்மைமிக்கது வவுனியா சாயி நிலையமாகும். பாலவிகாஸ் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு, குருமார் உதாரணமாக ஒழுகுகின்ற நிலையை நாம் காண்கின்றோம். இக்குருமாரின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் மாணவர்கள் பிரிவு 2. பிரிவு 3 ஆகிய பரீட்சைகளின் விஷேட பெறுபேறுகளின் மூலம் காணமுடிகிறது. சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி திட்டத்தில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியும். அதிபர்கள் மற்றும் கல்வி இலாகா உயர் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட கருத்துரைகள் மூலம் சிறார்களின் எதிர்கால வாழ்க்கையில் மனித மேம்பாடுகள் நற்பிரஜைகளை தோற்றுவிக்கும் என்பதில் ஐயம்கொள்வதற்கிடமில்லை. இவை எல்லாவற்றிற்கும் வழிகாட்டல் குழுவாய் இயங்கும் சாயி சமித்தி தலைவர். ஸ்ரீ. எஸ். முத்துலிங்கம் அவர்களின் அரும்பெரும் சேவைகளையும். அர்ப்பணிப்பு. தியாகம். எளிமை. நேர்மை ஆகிய உயர் பண்புகளையும் நாம் பாராட்டுகின்றோம்.

சுவாமியின் பணிகளை மேற்கொள்வதற்காக அமைத்த இக்கட்டடம் பகவான் என்றும் வாழும் இல்லமாக அமைத்து இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் மனச்சாந்தியையும். நிம்மதியையும். ஆத்மீக எழுச்சியையும் வழங்கும் ஸ்தலமாக அமையும்.

எங்களது நல்லாசிகளை இச் சந்தர்ப்பத்தில் கூறுவதோடு. பகவானின் அருட்கருணையும். கடாட்சமும் மென்மேலும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

32/4, தாமரைக்கேணிவீதி,
மட்டக்களப்பு.

*வடபிராந்திய ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா ஸ்தாபனங்களின் இணைப்புக்குழுத் தலைவரின்*

## *வேண்டுதல் பிரார்த்தனைச் செய்தி*

சாந்தி வருடமாகிய 1998 ல் ஸ்ரீசத்யசாயி சேவா ஸ்தாபன வட பிராந்தியத்தின் நுழைவாயிலாக உள்ள வவுனியா பெருநகரில் எங்கள் சற்குருநாதன் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் திவ்விய சங்கல்ப்பத்தினால் அமைக்கப்பட்டுள்ள "சாந்தம்" மந்திர் திறப்புவிழாவுக்கு அணிசெய்யும் பொருட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வேண்டுதல் பிரார்த்தனைச் செய்தியைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இவ்வாலயம் சாயி அடியார்களின் பிரார்த்தனையின் பெறுபேறாக அமைகின்றது. இம் மந்திரை அமைக்க சுவாமியால் தெரிந்தெடுக்கப்பட்ட கருவிகளாகிய யாவரும் மிகவும் பாக்கியம் செய்தவராவர். நாம் எல்லோரும் எமது நன்றியைத் தெரிவிக்க சுவாமியின் கமல பாதங்களைச் சிரசின்மேல் வைத்துப் போற்றிப் பணிவோமாக.

*சாயி சேவையில்*

*வே. சேனாதிராசா*
*தலைவர்*

---

## ஓம் சாய்ராம்
## ஆன்மீகப் பாதைக்கு அமைதி இருப்பிடம்

சுவாமி தனது உரைகளின் போது **"Mind' irs not Mandirs"** என்று கூறுவது வழக்கம் **(Sathiya Sai Speaks Vol VII page 450)** கற்களால் கட்டி கொண்டு வரப்பட்ட மனதை ஆத்மீக அதிர்வுகள் மூலம் ஆலயமாக்குங்கள் என்கிறார். இந்த மன ஆலயம் **(Mindiris)** அமைய மந்திர்கள் (Mandirs) உறுதுணையாக அமைகின்றன. எப்படி? அமைதியைப் பெற ஆலயங்கள் உதவுகின்றன. ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகள். நாமஸ்மரணைகள் பஜனைகள் ஒரு தெய்வீக அதிர்வை அங்கு உருவாக்குகின்றன. அங்கு செல்லும் அடியவர்கள் இவ்வதிர்வுனால் வசப்படுத்தப்பட்டு தம்மனதை வழிப்படுத்துகிறார்கள்.

சாயி நிலையங்களில் உலகியல் விடயங்களுக்கு இடமின்றி ஆன்மீக செயற்பாடுகள் மூலம் ஏற்படும் அதிர்வுகளும் அங்குள்ள அமைதியும் மன அமைதிக்கு அதாவது மன ஆலயத்தை புனிதபடுத்த வழிவகுக்கின்றன. வவுனியா சாயி நிலையம் மக்களின் தேவையை உணர்ந்து பகவானுக்கு ஒரு பொது இடம் அமைத்தது போற்றுதற்குரியது. அதுவும் கட்டடப்பணி தொடங்கியது முதல் அது பூரணமாகி திறப்பு விழா நடக்கும் வரை பகவான் திரு. எஸ். முத்துலிங்கம் அவர்களை கருவியாகக் கொண்டு காரியமாற்றியது. அதி அற்புதமானது.

சாந்தி வருடத்தில் சாந்திக்கு ஓர் இடம் அமைத்த வவுனியா சாயி அடியவர்களுக்கு பகவானின் ஆசீர்வாதம் என்றென்றும் நிறைந்திருக்கும்

"ஜெய் சாய் ராம்"

ஸ்ரீமதி. ம. சரவணபவன்
கல்வி இணைப்பாளர்
வடபிராந்திய இணைபபுக்குழு

## ஸ்ரீ. அ.சிவஞானம் தலைவர், கிழக்குப் பிராந்திய இணைப்புக் குழு அவர்களின் ஆசிச் செய்தி

*ஓம் சாயிராம்*

பகவத் கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், "தர்மம் குன்றி அதர்மம் கையோங்கும் பொழுது தான் அவதாரம் செய்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவேன்" என்றார்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் உண்மையான அவதாரப் பணி என்ன? தர்ம ஸ்தாபனம் வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் புதிய சக்தி கொடுத்து இன்றைய உலகில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையைத் திருத்தி, சனாதன தர்மத்தை மீண்டும் தழைக்கச் செய்து மனிதனை மனிதனாக வாழச்செய்கிறது.

ஒரு முறை ஒருவர் சுவாமியிடம் - "சுவாமி, பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள உங்கள் பக்தர்களின் நோய்களைக் குணப்படுத்தவும், கஸ்டங்களை நீக்கவும் தங்களால் எப்படி முடிகின்றது" என்று கேட்டார். அதற்கு சுவாமி "எனது பக்தர்களின் நம்பிக்கையும், பிரார்த்தனையும் என்னுள்ளே அடங்கியிருக்கும் அன்பையும் கருணையையும் தொடும் போது அவர்களின் பிரார்த்தனை நிறைவேறி கஷ்டங்கள் நீக்குகின்றன" என்றார்.

இக்கலியுகத்தில் இறைவனின் அருளைப் பெறச் சுலபமான வழி நாமஸ்மரணையே என்று சுவாமி பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். தெய்வ வழிபாட்டின் முதற்படியாக நாம் இறைவனின் நாமத்தையே உச்சரிக்கின்றோம். தொடர்ந்து சுயநலமற்ற சேவையைச் செய்கின்றோம். இவ்விரண்டு பணிகளையும் செய்வதற்காகவே சாயி நிலையங்களில் மண்டபங்கள் அமைக்கப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் முதன் முதலாக மிகச் சிறந்த அழகிய மாபெரும் சாயி மண்டபத்தை அமைத்த பெருமை வவுனியா சாயி சமித்தியின் அங்கத்தவர்கட்கும், விசேடமாக சமித்தித் தலைவர் சி. முத்துலிங்கம் அவர்களுக்குமே உரியது. அன்னார் கல்முனை சமித்தியின் தலைவராக இருந்த பொழுதும் சமித்தி மண்டபம் அமைக்க காணிபெற்றுக் கொடுத்தது மட்டுமல்லாமல் அப்பகுதியில் சாயி சேவையில் தீவிரமாக ஈடுபட்டவர். அவர் சாயி சேவைக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்று சொன்னால் மிகையாகாது.

வவுனியா சமித்தியைச் சேர்ந்த தலைவர், நிர்வாகிகள் அங்கத்தவர்கள் இம்மண்டபத்தை அமைக்க பொருளுதவி வாரி வழங்கிய கொடை வள்ளல்கள் சரீர உதவி வழங்கிய மற்றும சகலருக்கும் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பூரண அருளும் ஆசியும் கிடைப்பதுடன் சாயி சேவை பன்மடங்கு பெருகி சிறப்புடன் வளர வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்திக்கின்றேன்.

*அன்புள்ள*
*சாயி சேவகன் - அ.சிவஞானம்*

12, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.

*உன் கடமையைச் செய், பலனுக்காகக் கையேந்தாதே. அதுவே பெரிய வேள்வியாகும் - பாபா -*

## Message for "SHANTHAM"

*I am so happy that you have requested me to give a message for the opening of your New Mandir "SHANTHAM"*

*I am enclosing herewith a copy of a message by Bhagavan Sri Sathya Sai Baba in English and Sinhala. The contents of the Message are so encouraging to all of us, devotees, I think it will be very suitable for the occasion. It explains what is going to happen in the very near future in the year 2001.*

*We should be happy to understand that our Beloved Mother and Father, Bhagavan Baba, had selected us over some incarnations to spread his Message at the present time and as a result we have come together and performing all these Holy Activities. We should also be very thankful to him for using us as his Instruments.*
*I wish that the Opening Ceremony of the Mandir will be very successful with the Blessing of our Loving Lord Baba.*

*Yours in Sai Service,*
*A.M. Navaratne*
*Co-ordinator*
*Central Zone*

---

*We extend our warm felicitations to our dear brother and sisters in Vavuniya on the occasion of the opening of the New Mendir.*
*In the context of Bhagavan declaring this year as the year of Peace, (Santhi) we see the opening of "SHANTHAM " synonymous with the opening of fresh avenues for PEACE - Peace within, Peace outside, Peace for the Country, and all mankind*

*"Loka Samastha Sukhino Bhavanthu"*

*Jagath Gunesekara*
*President, Co-ordinating*
*Committee - Western & Southern Zone*
*Sri Lanaka.*
*11.8.1998*

# சாந்தம் என்ற பிரசாந்தியின் விழுது

“*நந்தி*”

( ஆசிரியர், சாயி மார்க்கம், ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக்கல்வி (தமிழ்) தேசிய அமைப்பாளர்)

பகவானுக்கும் வவுனியாவின் சாயி நிலையத்திற்கும் உள்ள அன்னியோன்யம் புட்டர்பர்த்தி செல்லும் அடியார்கள் நன்கு தெரிந்த ஒன்று. ஆகவே வவுனியா நிலையம் ஏற்கனவே பகவானின் ஆசீர்வாதம் பெற்ற ஸ்தலம் ஆகும்.

ஆரம்பம்-அத்திவாரம் தொடக்கமே தெய்வ அங்கீகாரம் பெற்ற புதிய மந்திர் “சாந்தம்” பிரசாந்தியின் ஒரு விழுது ஆக தோன்றியுள்ளது. வவுனியா இலங்கையின் இதயத்தில் இருப்பது. தெய்வீக அலைகளை நலா பக்கமும் பரப்பி இந்த நாட்டில் தர்மமும் சாந்தியும் ஏற்படுத்துவதற்கு வவுனியாவுக்கு வாய்ப்பும் கடமையும் உண்டு.

தற்போது, சாயி சேவைகளில் முன்னணியில் இருப்பது ஸ்ரீ சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வியை அள்ளி மாணவர்களுக்குப் பரப்பும் பணி ஆகும். ஐந்து பத்து வருடங்களில் ஒரு சந்ததி, சாயியின் மனித மேம்பாட்டு ஐசுவரியத்தில் ஊறி வளர்ந்தவர்களாக இருப்பர். அந்த தெய்வீக தாக்கம் நமது நாட்டை முறையான பாதையில் எடுத்துச் செல்லும்.

அடுத்ததாக, சாயி சேவையாளர்களாக தற்போதைய இளைஞர் விதைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள்தாம் 21ஆம் நூற்றாண்டின் சாயி நிர்வாகிகள் அவர்களுக்கு இப்போதைய தேவை தலைமை ஏற்பது அல்ல, தங்களை ஆத்மீக சேவைக்கு பக்குவப்படுத்துவதுதான். அவர்கள் பல்கலைகளை விதம்விதமான விஞ்ஞானம், சமூக தொடர்பு ஆகியவற்றில் அறிவும் ஆற்றலும் மன அமைதியும் பெறுவதற்கு பயில வேண்டும். தொண்டு செய்வதன் மூலம் கற்க வேண்டும் அடக்கமாக இருக்கப் பழகுவதுதான் கல்வியின் முதற்படி என்று அறிய வேண்டும். “சாந்தம்” என்ற பெயர் சாயி பஜனையின் பக்தியிலும் சாயி தென்றலின் குளிர்ச்சியிலும், சாயி தரிசனதின் பெயரிலும் கொண்டுள்ளது. இங்கே புதிய சிந்தனை, புதுமையான சேவைகள், இறுக்கமான நிர்வாகமும் வேண்டும்.

நவம்பர் மாதம் எமக்கு புனிதமான மாதம். அந்த மாதத்தில் பிறக்கும் “சாந்தம்” தெய்வீகமானவள். மகிழ்கிறோம், வாழ்த்துகிறோம், சாயி பகவானை பிரார்திக்கின்றோம்.

*ஜெய் சாயிராம்*

பேராசியரியர். செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

*தவறு செய்யாத மனிதனில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் தவறு செய்யாதிருக்க வேண்டும் - பாபா -*

# பிரசாந்தி நிலையம் - புட்டபர்த்தி.

## *சர்வரோக நிவாரணி ஸ்ரீ சத்திய சாயீஸ்வரர்*

சுவாமியின் நேர்முக சந்திப்பு அறை. எம்முன்னால் ஒரு இளம் பெண் நிற்கிறாள். அவள் அருகே அவளுடைய பாட்டி நிற்கிறாள். அந்த இளம் பெண் கையில் ஒரு கட்டு கடிதங்கள். சுவாமி அவள் அருகே வருகிறார். "உனக்கு என்ன பிரச்சினை" சுவாமி ஆங்கிலத்தில் கேட்கிறார் அவளால் பதில் சொல்ல முடியவில்லை கண்கள் கலங்குகின்றன. கைகள் நடுங்குகின்றன சுவாமி அவள் கையில் இருந்த கடிதங்களை வாங்குகிறார். அவற்றில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியை அவளிடம் கொடுக்கின்றார். அக்கடித உறைக்குள் கையை விட்டு ஒரு போட்டோ படத்தை எடுத்து "இவர்தானா " என்று ஆங்கிலத்தில் கேட்கிறார். அவள் வாய்திறந்து பேசவில்லை. தலையை ஆட்டி ஆம் என்று மூன்று தரம் சொன்னாள். அத்தியாயம் முடிந்துவிட்டது. காலத்தை வீணே கழிக்காதே "புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பாயாக" என்று சுவாமி சொன்னதும் அப்பெண்ணும் அவள் பாட்டியும் சுவாமியின் பாதத்தில் விழுந்து அழுதார்கள். சுவாமி அவர்களை எழும்புமாறும் "உனக்கு நான் உதவி செய்வேன்" என்று ஆறுதல் சொன்னார்.

அறையில் இருந்து வெளியே வந்ததும் அவர்களை அணுகி "உங்களுக்கு என்ன நடந்தது" என்று கேட்டேன். அப்பெண் தன் துன்பக் கதையைச் சொன்னாள். அவள் இலங்கையைச் சேர்ந்தவள். ஒரு சிங்களப் பெண் அவளுக்கு ஒரு காதலன். அவன் இவளிடம் பணம் பெற்று இங்கிலாந்து போயிருக்கிறான். உன்னை விரைவில் அழைப்பேன் என்று உறுதியளித்து சென்றவன் சில மாதங்கள் தொடர்ந்து கடிதங்கள் அனுப்பியுள்ளான். பின்பு அவனிடம் இருந்து கடிதங்களே இல்லை. அவள் தனக்கு வேண்டியவர்கள் மூலம் இங்கிலாந்தில் அவனைப்பற்றி அறியமுற்பட்டாள். அவன் இங்கிலாந்தில் இன்னுமொரு பெண்ணுடன் குடும்பம் நடத்துவது தெரியவந்தது. அவளுக்கு ஆறுதல் அளிக்க சுவாமியினாலேயே முடியும் என்ற நம்பிக்கையில் அவரைத்தேடி வந்தாள். சுவாமி அவளின் நிலையை சொன்னது மட்டுமல்லாது அவளுக்கு உதவி செய்வேன் என்று உறுதியுமளித்தார். தன் மனச்சுமைகள் மறைத்து மலர்ந்த முகத்துடன் அவள் காணப்பட்டாள். ஒரு சில வினாடிகளில் அவள் முகத்திலிருந்த சோகம் மறைந்தது. புதிய ஒளி தெரிந்தது. சுவாமியின் உறுதி மொழியே அம்மாற்றாத்திற்கு காரணம் என்று சொல்ல வேண்டுமா! இந்த உண்மைச் சம்பவம் சுவாமிக்கு எப்படி தெரியும். சுவாமிக்கு எப்படி தெரியும்? அவருக்கு தெரியாதது என்ன இருக்கிறது அவர் கடவுள் அல்லவா.? புட்டர்பர்த்தி வருமுன் மற்றொரு சம்பவம் அவளுக்கு. பெங்களூர் "பஸ் தரிப்பு" நிலையத்தில் அவளும் பாட்டியும். பெங்களூர் பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் இரவு 10.30க்கு புட்டர்பத்தி நோக்கி புறப்பட்டு விட்டது. பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து அசந்து போய் நின்றிருக்கின்றார்கள். முப்பது வருஷத்திற்கு முன்பு பெங்களூரிலிருந்து ஒரே ஒரு பஸ் சேவையிலிருந்ததது. அந்த வண்டியை தவறவிட்டால் மறுநாள் பயணம் செய்ய வேண்டும். திரும்பவும் ஹோட்டலுக்கு செல்ல வேண்டும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றவர்கள் முன் ஒரு அம்பாசிட்டர் கார் வந்து நின்றது. காரில் இருந்தவர்கள் எங்கே போக வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள் "புட்டர்பத்திக்குப் போக வேண்டும் பஸ் வண்டியை தவறவிட்டுவிட்டோம்" என்று பதில் அளித்துள்ளார்கள் " நாங்களும் புட்டபர்த்திக்குச் செல்கின்றோம் வாருங்கள் என்று சொன்னதுதான் தாமதம் வண்டியில் ஏறிவிட்டார்கள். முன்பின் தெரியாதவர்கள் இரவு நேரம். இருந்தும் சுவாமியின் மீது வைத்திருக்கும் அபரிமிதமான நம்பிக்கை அச்சமோ, பயமோ, அவர்களுக்கு ஏற்படவில்லை. புட்டர்பத்தியில் இரவு இரண்டு மணிக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். பணம் கொடுக்க முனைந்த போது "இப்போது என்ன அவசரம் நாளை பெற்றுக்கொள்ளலாம்" என்றிருக்கிறார்கள். புட்டர்பத்தியில் அவர்களையும் வண்டியையும் ஒவ்வொரு நாளும் தேடியிருக்கிறார்கள். அவ்வண்டியை அனுப்பியது யார்? வண்டியில் வந்தவர்கள் யார்? சுவாமியே அன்றி வேறு யாராக இருக்க முடியும். பக்தர்களின் அபயக்குரலுக்கு கைகொடுக்கும் ஆபத்பாந்தவரல்லவா இறைவன். கஜேந்திரனின் அபயக்குரலுக்கு ஓடிவந்து உதவியவரல்லவா இறைவன்.

சென்னை அடையாறு, சுந்தரத்தில், பக்தர்கள் திரண்டிருக்கிறார்கள். சுவாமி அனைவருக்கும் தரிசனம் தருகின்றார். அன்பாக பேசுகின்றார். கடிதங்களை அன்புடன் பெறுகின்றார். விபூதி பிரசாதம் வழங்குகின்றார். என் அருகே இருந்த ஒரு சிங்களக் குடும்பத்தில் ஆறுவயதுள்ள குழந்தையை முதுகில் தட்டி "உன் பெயர் என்ன" என்று செல்லமாக கேட்கின்றார், அக்குழந்தை தன் பெயரை சொல்லுகின்றது.

"உன் சகோதரன் என்படி இருக்கின்றான்" சுவாமியின் மூன்றாவது கேள்வி குழந்தை பதில் அளிக்கமுடியாமல் தடுமாறுகின்றது குழந்தையும் தாயும் தந்தையும் ஏககாலத்தில் "அவருக்கு மனநிலை சரியில்லை என்று பதிலலிக்கின்றார்கள்" யார் சொன்னது. அவனுக்கு மனநிலை சரியாக இருக்கின்றது உடல் நிலை சரியில்லை. அவனால் சரியாக நடக்க முடியாது"என்று சுவாமி சொன்னதும் தாயும், தந்தையும் சுவாமி காலில் விழுந்து அழுதார்கள். எழுங்கள் நான் உங்கள் வீட்டுக்கு வருகின்றேன்" என்று சுவாமி இரண்டு தடவை சொன்னார் அவர்கள் அன்றுதான் சுவாமியை பார்க்க வந்திருக்கிறார்கள். சுவாமியின் பக்தர்களே அல்ல. பஜனை முடிந்து வெளியில் வந்ததும் அவர்களுடன் பேசிய போது இந்த உண்மை தெரியவந்தது. அவர்களுடைய மகன் றோயல் கல்லூரியில் படிப்பவன் அவனுக்கு சுவாமியின் படம் ஒன்று நண்பன்மூலம் கிடைத்திருக்கிறது. அப்படம் அவன் மேசை மீது எப்போதும் இருக்கும். அவன் ஒரு "போலியோ" நோயாளி. சுவாமிக்கு அவன் நோய் எப்படித் தெரியும்? இதுதான் பலர் கேட்கும் கேள்வி. அவர் இறைவன். அவருக்கு தெரியாதது இப்பிரபஞ்சத்தில் என்ன இருக்கின்றது. இருவரும் சுவாமி எங்கள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னாரே. வருவாரா? என்று கேட்டார்கள். "ஆம் வருவார். அவரை அன்போடு அழையுங்கள் அவர் ஓடி வருவார் அவரை நோக்கி ஒரு அடி எடுத்து வையுங்கள். சுவாமி பத்து அடிகள் வைத்து விரைந்தோடி வருவார் உள்ளம் உருகி காதலாகி கண்ணீர் விட்டீர்களானால் உங்கள் கண்ணீரை போக்கும் கருணாமூர்த்தி அவர். நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைகள் தரும் பாடம். நம்பிக்கையே வாழ்க்கை. நல்ல வாழ்க்கை. அவநம்பிக்கை அலங்கோல வாழ்க்கை. நம்மால் என்ன செய்ய முடியும். எதுவுமே செய்ய முடியாது. இறைவன் ஒருவனாலேயே அனைத்தும் நடைபெறுகின்றது. சுவாமிக்கு தெரியாதது எதுவுமிமேயில்லை. எல்லாம் தெரிந்தவர் எல்லாம் அறிந்தவர். சுவாமி "விபூதி" பிரசாதமாகவோ, அமிர்தமாகவோ, சுகந்த நறுமணமாகவோ, ஏன் முழு உருவுடனோ வருவார். ஆயிரம் ஆயிரம் வீடுகளில் அகில உலகிலும் சுவாமி காட்சி கொடுக்கின்றார். என்று பதில் கொடுத்தேன். சில வருடங்களுககு முன் அப்பக்தரை கொழும்பில் சந்தித்தேன். மறுநாள் தன் மகனையும், அவன் மனைவி பிள்ளைகளையும் அழைத்து வந்தார். தன் மகன் சுவாமியினால் பூரண குணம் அடைந்ததை சொல்லிச் சொல்லி பூரித்துப் போனார். சுவாமி வாழும்போது வாழ்கின்ற நாம் பாக்கியசாலிகள், அவரின் திருப்பெயரை தினமும் நினைத்து பிரார்த்திப்பவர்கள் அதிஸ்டசாலிகள். பயம், அச்சம், பதட்டம், கொடூரமான நோய்களால் துன்பப்படும் மனித குலத்தை காப்பாற்றும் சர்வரோக நிவாரணி பகவான் ஸ்ரீ சத்ய சாயிஸ்வரர். அவர் பொன்மலர்ப்பாதங்களில் சரணடைவோம். " பூமி பந்தை பேரழிவினின்று காப்பாற்றுமாறு தினமும் பிரார்த்திப்போமாக."

சுவாமி சொல்லுகிறார் கேளுங்கள்:
"கடல் ஒரு சமயம் ஆறுகளை
ஏற்றுக்கொள்ளாது ஒதுக்கலாம்.
ஆனால் நான் ஒரு பொழுதும் என்
பக்தர்களை கைவிடேன்"

*செ. இராசதுரை*
*முன்னாள் இந்து கலாசார அமைச்சர்*
*முன்னாள் இலங்கைக்கான மலேசிய தூதுவர்*
*முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்*

*தன்னம்பிக்கை என்பது தங்க பஸ்பம்.*
*அதுமட்டும் இருந்தால் ஆரோக்கியம்*
*என்னும் ஆனந்தம் கிட்டும்.* - பாபா -

## *ஸ்ரீ.தி. இராசதுரை அவர்களின் ஆசிச்செய்தி*

வன்னிப் பிரதேசத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கட்கு ஒரு மத்தியஸ்தானமாக வவுனியா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயிசேவா நிலையத்தின் "சாந்தம்" என்னும் புதிய மந்திர் திறந்து வைப்பதையிட்டு சாயி அடியவன் என்ற வகையில் யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிலையம் வவுனியாவிலுள்ள அகதி முகாம்களிலுள்ள சிறுவர்களுக்கான போஷாக்குத் திட்டத்தின் கீழ் "இலைக்கஞ்சிச் சேவை" யை நாள்தோறும் செய்து வருவதையிட்டு இந்நிலையத்தின் தொண்டர்களை மனமார வாழ்த்துகிறேன்.

ஸ்ரீ சத்ய சாயி பகவான் கூறும் சமூக சேவையை இந்நிலையம் தொடர்ந்து ஆற்றி சாயியின் பூரண கிருபையை பெறப் பிரார்த்திக்கின்றேன்.

*சாயி சேவையிலுள்ள*
*தி. இராஜதுரை*
*முன்னாள் அரச அதிபர், வவுனியா.*

---

## வாழ்த்துச் செய்தி

வவுனியா சத்ய சாயி சேவா நிலையத்தின் "சாந்தம்" என்னும் புதிய பஜனை மண்டபம் திறந்து வைப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

வவுனியாவில் கடமை செய்த காலத்தில் நிலையத்தின் சேவைப்பணிகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. நாராயண சேவை நடப்பதற்குரிய சமையலறை கட்டி திறந்த போது நானும் எனது பாரியாரும் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. பாரியார் முதல் அடுப்பு பற்ற வைத்து சமையல் ஆரம்பித்து வைத்தார். நாராயண சேவையை தொடர்ந்து ஒவ்வொரு போயா தினங்களிலும் நிலையம் செய்துவருவதையிட்டு தொண்டர்களின் சேவை பராட்டப்பட வேண்டியதே.

புதிய மந்திருக்கு அடிக்கல் நாட்டுவதற்கும் எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது பகவானின் திருவளே. இன்று பிரசாந்தி நிலையம் போன்று புதிய மந்திர் எழுந்து நிற்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தொண்டர்களுக்கும் பகவானின் அருளாசி கிடைக்க வேண்டுமென பிரார்த்தித்து எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சாயி சேவையிலுள்ள
எஸ். எஸ். நவரட்ணராசா
முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்.

3/2, மாடி வீடு,
செவன ஒழுங்கை,
மாளிகாவத்தை, கொழும்பு 10.

> *மற்றவர் குற்றங்களைக் காணும் போது குருடாகவும், கேட்கும்போது செவிடாகவும் இருக்க வேண்டும்.* – பாபா –

# ஸ்ரீ. ஆ. தியாகராசா அவர்களின் செய்தி

வவுனியா பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத் தலைவர் ஸ்ரீ.சி.முத்துலிங்கம் அவர்களிடம் இருந்து 27.07.1998ந் திகதி இட்ட அதி சீக்கிர கடிதம் ஒன்று எனக்கு 08.08.1998ல் கிடைத்தது. அதில் புதிதாக அமைக்கப்பட்ட " சாந்தம்" புதிய நிலைய மண்டபம் 02.11.98ல் திறப்பதாகவும் நீங்கள் இந்த நிலையத்தின் முன்னாள் தலைவராக இருந்துள்ளீர்கள் என்றும், நிலையத் திறப்பு விழாவையொட்டி வெளிவர இருக்கும் மலருக்கு ஒரு ஆசிச் செய்தியும் அனுபப்பிவைப்பதோடு, விழாவிற்கு வரவேண்டும் எனக் கோரி இருந்தார்.

கடிதத்தை பார்த்த மாத்திரத்தில் என்னையறியாமல் என் இமைகள் பணிந்தன " என்னுள் அறியாப்பதம் தந்து" தன் பொன்னார் திருவடியை சிந்தித்து வந்திக்கவைத்த ஐயன், அருள்பரப்பும் நிலையத்திற்கு நான் யார்? ஆசி கூற என எண்ணித்தவித்தேன். எது எது எப்போது நிறைவேற வேண்டுமோ, அதனை நிறைவேற்ற இறைவன் அப்போது நம்மை கருவியாக பாவிப்பான். இதுதான் நியதி. ஆகவே, நான் செய்தேன், அவர் செய்தார், இவர் செய்தார், என்று இல்லாமல், ஒவ்வொருவர் காலத்திலும் ஒவ்வொருவிதமாக வளர்ந்த இந்த நிலையம் இன்று " சாந்தம்" உருவில் கம்பீரமாக எழுந்துள்ளது. அவ்வப்போது அடியேன் வவுனியாவிற்கு வரும்போதெல்லாம் மண்டபத்திற்கு வந்து ஐயன் அருள் பெற்று வருவேன். நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாகப் பல்துறைகளிலும் வளர்ந்து வரும் நிலையத்தின் வளர்ச்சியையும், சேவையையும் கண்டு பெருமிதம் கொண்டேன். இந்த நிலையத்தில் சேவை எங்கே தேவை எனத்தேடி சேவை செய்த பல தொண்டர்கள் இன்று எம் மண்ணில் இல்லை. இந்த நிலையம் தனக்கொரு சொந்தக்காணியில் சேவையை செய்ய வேண்டும் என எண்ணி உழைத்த பல சாயி அடியார்கள் பலப் பல இடங்களுக்குப் போய்விட்டார்கள். என்றாலும், நாம் வளர்த்த மரம் பூத்துக் காய்த்துக் கனியாகி பயன்தரும் நிலையில் உள்ளது என்பதை அறியும் போது பரிபூரணமாக மனச்சாந்தி பெறுவார்கள். இந்த அளவு வளர்ச்சி பெற்று மிளிர்வதற்கு பலவகையாலும் ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைவருக்கும் பகவானின் நல்லாசி கிடைப்பதாக. அல்லும் பகலும் அயராது உழைத்த சேவா நிலைய அனைத்து தொண்டர்களுக்கும் கண்கண்ட நம் குருநாதரின் கடைவிழி அருள் கிடைக்கட்டும். " சாந்தம்" திறக்க நாட்டில் சாந்தியும், சமாதானமும் மலர்வதாக. சேவை தொடரட்டும்.

*ஓம் சாந்தி சாந்தி*

*ஆ. தியாகராசா*
*முன்னாள் தீவுப்பகுதி தெற்கு உதவி அரச அதிபர், - பிரதேச செயலாளர்.*
*தலைவர் ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் அறங்காவலர் சபை*
*நயினா தீவு.*

> *காட்டிற்கு சென்று கடுந்தவம் புரிவதை விட,*
> *கண்ணற்றவரின் கழிபிடித்து*
> *வழி காட்டுதல் சாலச் சிறந்தது.*
> *- பாபா -*

*ஓம் சாயிராம்*

## *டாக்டர். எஸ். சின்னத்துரை அவர்களின் வாழ்த்துச் செய்தி*

வவுனியா மாவட்டத்தில் பகவான் சத்திய சாயி சேவா நிலையத்துக்கென ஒரு அழகிய மண்டபம் "சாந்தம்" என்ற பெயரில் நிர்மாணிக்கப்பட்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது. அடியேன் முன்னாள் தலைவர் என்ற வகையில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நிலையம் ஆற்றிய பல சேவைகளின் நிமித்தம் இப்புதிய மந்திர் பகவான் ஆசியுடன் நிறைவேற்றியிருப்பது சாயி அடியவர்கள் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சிக்குரியதே.

தற்போது இருக்கும் பஜனை மண்டபம் 1983 தைப்பூசதினத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கு அத்திவாரம் இடுவதற்கு என்னை வரும்படி அப்போதைய வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியாக இருந்த டாக்டர். எஸ். நிரஞ்சன் அழைத்தார். அன்றைய தினத்தில் இருந்து அடியேன் நிலைய அங்கத்தவராகி சாயி சேவையில் ஈடுபட்டேன். குறிபப்பாக நிலையத்தால் நடத்தப்பட்ட வைத்திய முகாம்களில் சேவையாற்றினேன்

இவ்வங்கத்தவர்கள் வேண்டுதலால் 1986 - 88 வரை நிலையத் தலைவராக சேவையாற்றினேன். அதன் பயனாக நிலையம் தத்தெடுத்த கிராமமாகிய பொன்னவரசங்குளத்தில் இருவாரங்களுக்கு ஒரு முறை இலவச வைத்திய சேவை செய்து வருகின்றேன். இது சுவாமியால் எனக்கு கிடைத்த பெரும்பாக்கியமாக கருதுகிறேன்

1990ல் ஏற்பட்ட வன்செயலினால் நிலையம் பாதிப்படைந்து ஆட்கள் இல்லாது இருந்த நேரத்தில் தற்போதைய தலைவர் சி. முத்துலிங்கமும் அடியேனும் தனித்து இராணுவ அனுமதி பெற்று நிலையத்தில் விளக்கேற்றினோம். பின் தொடர்ந்து பஜனை நடைபெறக்கூடியதாக செயலாற்றினோம். அவ்வேளையை நினைக்கும்போது தற்போதைய புதிய மண்டபம் மிளிர்ந்து நிற்பதைக் காண அளவிலா ஆனந்தமடைகின்றேன்.

தற்போதைய மண்டபம் சுவாமியின் ஆசியுடன் தலைவர் சி. முத்துலிங்கம் அவர்களின் விடாமுயற்சியாலும் ஊக்கத்தாலும் நிர்வாக உறுப்பினர்களின் நன்கொடைகளினாலும் வன்னிநகரின் மத்தியில் மிளிர்ந்து நிற்பதையிட்டு அடியேன் பெருமகிழ்ச்சியடைந்து எல்லா அடியவர்களும் இன்புற வேண்டி வாழ்த்துகிறேன்.

*சாயி சேவையிலுள்ள.*
*டாக்டர். எஸ். சின்னத்துரை.*
*நிலைய உப தலைவர்.*
*சமாதான நீதவான்.*

**வவுனியா.**
**02-11-1998**

*பிறர் தவறு செய்யும் போது மட்டும் நமது கண்கள் பூதக் கண்ணாடி அணிந்து கொள்கின்றன; வாய் ஒலிபெருக்கியாய் விடுகிறது.*
*- பாபா -*

## முன்னாள் தலைவர் ஸ்ரீ. ச. விஜயரட்ணம் அவர்களின் ஆசிச்செய்தி

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம், வவுனியா சென்ற 27 வருடங்களாக இயங்கிவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. அந்தநாள் தொடக்கம் ஒரு சிறிய கட்டடத்தில் பஜனை செய்து வந்தார்கள்.

பல தலைவர்கள் இருந்து செயற்பட்டு வந்தார்கள். திரு. முத்துலிங்கம் அவர்கள் தொண்டராகவும், தலைவராகவும் சென்ற பத்து(10) வருடங்களுக்கு மேலாக இந்தச்சமித்தியில் கடமையாற்றி வருகிறார். அவருடைய சேவைக்காலத்தில் பலவிதமான முன்னேற்றங்கள் காணப்பட்டன.

நிரந்தரக் கட்டடம் (பஜனை மண்டபம்), பஜனையில் முன்னேற்றம், பாலவிகாஸ் வகுப்பு, கல்வி வட்டம், சேவை, அன்னதானம், சிறுவர்களுக்கும், வயோதிபர்களுக்கும், கர்ப்பிணித்தாய்மாருக்கும் இலைக்கஞ்சி காய்ச்சிக் கொடுத்தல், அதிக நிலையங்கள் உற்பத்தியாக்குதல், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலைங்கள் திறந்து வைத்தல் ஆகிய ஆக்க வேலைகள் நடந்தன.

திரு. முத்துலிங்கம் அவர்கள் ஒரு சிறந்த தலைவர் எனக் காணப்பட்டதால், இவரை வடபிராந்திய இணைப்புக்குழு உபதலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இவர் அடிக்கடி பகவானைச் சந்தித்து அவரின் ஆசியைப் பெற்றவர். 98-11-02ம் திகதி இந்த மண்டபம் திறக்கப்பட வேண்டுமென்று பகவானால் நியமிக்கப்பட்டது.

இந்த முன்னேற்றத்திற்கு உதவியாக இருந்த மற்ற நிர்வாக சபை உறுப்பினர்களையும் பாராட்டி எனது ஆசி உரையை முடித்துக்கொள்கிறேன். இந்த மண்டபமும், சமித்தியும் மென்மேலும் முன்னேற வேண்டுமென்று பகவானை வணங்கி ஆசீர்வதிக்கிறேன்.

"சாயிராம்"

இப்படிக்கு
ஸ்ரீ. ச. விஜயரட்ணம்
முன்னாள் தலைவர்,
வடபிராந்திய சாயி நிறுவனங்கள்.

---

## வி. கே. சபாரத்தினம் அவர்களின் ஆசிச்செய்தி

*"சாயிராம்"*

83ம் ஆண்டுகளின் முற்பகுதியில் அரசாங்கம் வழங்கிய 40 பேர்ச் நிலத்திலே, ஒரு பக்கமாக, தகரத்தினால் கூரை வேய்ந்து ஒரு பஜனை மண்டபம் கட்டப்பட்டது. பகவானின் போதனைகளை வவுனியா எங்கும் பரப்பும் கேந்திரமாக அது ஓங்கி வளர்ந்தது. இன்று வவுனியாப் பிரதேசத்திற்கும், ஏனைய மாவட்ட சாயி அடியார்களுக்கும் ஒரு கற்பக தருவாக விளங்குகிறது.

சேவைப் பணிகளையும், இதர ஆத்மீக சாதனைகளையும் ஆர்வத்துடனும், அர்ப்பணத்துடனும் சிறப்புறச் செய்யும் வவுனியாவிலுள்ள சாயி சகோதர சகோதரிகளுக்கு, மேலும் சந்தோஷமும், சாந்தியும் அருளும் பொருட்டு சாந்தத்தில் எழுந்தருளியிருக்கிறார் சாயி பகவான்.

எண்பத்தைந்தில் "சாந்தத்தின்" வரைபடத்தை சுவாமியிடம் சமர்ப்பித்து, அவரின் திருக்கரங்களால் அதற்கு ஆசீர்வாதம் பெற்றது முதல், தெய்வீக அருளோடு "அங்குல அங்குலமாக" அதனை கட்டி எழுப்ப அயராது உழைத்த வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் உப- தலைவரும், வவுனியா ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் தலைவரும், சாயி பணியே தன் மூச்சாகக் கொண்டவருமான ஸ்ரீ எஸ். முத்துலிங்கம் அவர்கட்கும், அவருடன் சேர்ந்து பணியாற்றும் ஏனைய பெருமக்களுக்கும் பகவான் எல்லா நலன்களும் அருளுவாராக.

"சாயிசேவையில்"

வி. கே. சபாரத்தினம்
செயலாளர்,
வடபிராந்திய இணைப்புக்குழு
சத்திய சாயி ஸ்தாபனங்கள்,
முன்னாள் வவுனியா கல்விவட்ட நிர்வாகி.

# ஒரு தேவையின் நிறைவு

இன்று உலகம், 21 ம் நூற்றாண்டின் வரவை, பயம் கலந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதேவேளை, மனிதனின் 21ம் நூற்றாண்டு தேவைகளைத் திட்டமிட்டு, அவற்றை இலக்காக வைத்து பல்வேறு உலக நிறுவனங்கள் செயற்பாட்டில் இறங்கியுள்ளன. மருத்துவம் சுகாதாரம், உணவு, வீட்டுவசதி, தண்ணீர், போக்கு வரத்து, செய்தித் தொடர்பு போன்ற தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்த உலக நிறுவனங்கள் நவீன ஆராய்ச்சிகளையும் பயன்படுத்த ஆயத்தமாகின்றன.

ஆனால், மனிதன் ஆன்மீக முன்னேற்றத்தையோ, அவனது மனத்தில் ஏற்படவேண்டிய உயர் மாற்றத்தையோ பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவைத் தவிர வேறொருவரும் சிந்தித்ததாக தெரியவில்லை.

21ம் நூற்றாண்டில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய பலம், ஒவ்வொரு தனிமனிதனின் சிந்தனையிலும், செயலிலும் தங்கியுள்ளது. இந்த வகையில் 21 ம் நூற்றாண்டை எதிர்கொள்ள இலங்கை சத்ய சாயி நிறுவனம் தயாராகி வருகிறது.

இந்த மாபெரும் கைங்கரியத்தை வன்னிப் பகுதியில் ஒருங்கிணைக்க சகல வசதிகளையும் கொண்ட ஒரு கட்டிடம் உருவாகியுள்ளதைப் பார்க்கும் போது, பகவான் பாபா எங்கள் இலட்சியத்துக்குக் கொடுத்திருக்கும் ஆசிர்வாதமாகவே கருதுகிறோம்.

இந்த ஆன்மீக தேவையை நிறைவுசெய்ய இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கும் இந்த நிலையம் இப்பகுதியிலுள்ள ஆன்மீக சாதகர்களுக்கும், நாட்டமுடையவர்களுக்கும் ஒரு வரபிரசாதமாக அமையும். இம்மண்டபத்தை அமைப்பதில் அயராது உழைத்த இந்நிலையத் தலைவர் ஸ்ரீ. எஸ். முத்துலிங்கம் அவர்களுக்கும, அவருடன் இணைந்து செயற்பட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கும் பகவானின் பூரண ஆசிகள் என்றும் உண்டு.

*"ஜெய் சாயிராம்"*

எஸ் ஆர். சரவணபவன்
வடபிராந்திய சத்யசாயி நிறுவனங்களின்
ஆன்மீகப்பணி இணைப்பாளர்.

*தூற்றலினால் துவண்டு போகாமலும், போற்றினால் பெருமிதமடையாமலும், கடமையைத் தவறாது செய்பவனே உயர்ந்தவன். – பாபா –*

# டாக்டர். இரா. சிவஅன்பு அவர்களின் ஆசிச் செய்தி.

வவுனியா "சாந்தம்" திறப்பு விழா மலருக்கு ஒரு கட்டுரை வழங்குவதில் கழிபேருவகை எய்துகிறேன். மனிதன் தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை ஒருவர் போல் இன்னொருவர் இருந்ததில்லை. ஒவ்வொருவரும் நடை, உடை, பாவனை, எண்ணம், சொல் செயல்களால் வேறுபடுகின்றனர்

ஒரே தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகள் குணம் வேறு, நிறம் வேறு உருவ அமைப்பு வேறு, முகபாவம் வேறு, உடைவேறு, என்று இவ்வாறு எல்லாவற்றிலும் வேறுபட்டு நிற்கின்றனர். உதாரணமாக இராமயணத்தில் இராவணாதி பிள்ளைகள் நால்வர், இராவணன் சிறந்த சிவ பக்தன், ஆனால் மூர்க்கன். கும்பகர்ணன் நல்லவன் ஆனால் முரடன், விபிஷணன், பிரமசாது, அடுத்து சூர்ப்பநகை. சூர்ப்பம் என்றால் முறம், முறம் போன்ற நகங்களை உடையவள். அவளைக் கண்டு கணவனாரே நடுங்குவாராம். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த நால்வரும் இப்படி வேறுபட்டு நிற்கின்றனர்.

ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் மனிதர்கள் எந்தவித கருத்துவேறுபாடும் காட்டுவது இல்லை. அது என்ன ? இன்பம் வேண்டும் அடைய வேண்டும் துன்பம் துடைக்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபாடு இல்லை. ஆனால் இதற்குதான் வழிதெரியாது திண்டாடுகிறோம்.

ஒரு அன்பன் துன்பப்படுகிறான் என்றால் யார்மூலமாவது பணம், பொருள், முதலியன அனுப்பி உதவுவது வழக்கம். ஆனால் அன்பு கருணை அதிகமாகி துன்பப்படுபவர் நெருங்கியவரானால், நேராகச் சென்று, அவரைப் பார்த்து, பேசி, ஆறுதல் சொல்லி உதவிகள் செய்து அவரின் துன்பம் துடைத்து இன்பம் எய்தும்படி வழிகாட்டி வருவார்கள். அதுபோலவே இறைவனும் அன்பு அதிகமாகும்போது அடியவர்களை அனுப்பி உதவி செய்வார். கருணை நிறைந்து அன்பு ஊற்றெடுத்து ஓடும்போதும் அன்பர்கள் துன்பம் அதிகரித்து துவளும் போதும் அவரே நேராக வந்து அவதானித்து சம்பாஷித்து ஸ்பரிசித்து நன்நெறிகாட்டி, உய்வு பெறும் பொருட்டு அருள் வழங்கி நிற்பார்.

அப்படி வந்துள்ள அவதாரமே "பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா," பல முனிசிரேஷ்டர்களுடையதும், சாதுக்களினதும் அயராத வேண்டுதலுக்கு இணங்க "ஜகத் குருவாக" சச்சிதானந்த சொரூபி, "சற்குருவாக" சாட்சாத் சாயிநாதனாக தானே வைகுந்தத்தில் இருந்து வந்துள்ளதாக பகவான் தனது 60வது ஜயந்தி விழாவில் திருவாய் மலர்ந்தருளியதை சாயிபக்தர்கள் காது குளிர, மனம் குளிர கேட்டோம்.

அவர் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கின்றார். எனினும் பக்தர்கட்கு அருளும் பொருட்டு ஆங்காங்கே ஆலயங்களும் நிலையங்களும் அமைத்து அவரை எழுந்தருளப்பண்ணி வழிபாடு செய்து வருகிறோம். அந்த வரிசையில் வவுனியாவாகிய எல்லைப்புறத் திருநகரில், சுவாமிக்கு ஒரு சிறந்த ஆலயம் (நிலையம்) அமைத்து விழா எடுத்த இந்நாள் சாயி பக்தர்கட்கு ஒரு பொன்னாள் ஆகும்.

புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தையே நினைவு படுத்தும் வகையில் இன் கவின் கலை அம்சத்தோடு தை நிர்மானித்த பெருமை பங்களிப்புச் செய்த எல்லோருக்கும் சேரும் என்றாலும் விசேடமாக திரு. எஸ் முத்துலிங்கம் (சாயி சேவகன்) அவர்களையே சேரவேண்டியது ஒன்றாகும்.

அவர் இராப்பகல் இதே சிந்தனையுடன், பல அரும் பெரும் முயற்சிகள் செய்துள்ளதை அடியேன் அறிவேன். பலமுறை சுவாமியிடம் சென்று இதுபற்றி தெளிவுகளையும் ஆசிகளையும் பெற்றுவந்து சுவாமியின் பூரண ஆசியுடனேயே இதை திறக்கின்றார்கள்.

இதைப்பூரணப்படுத்த உழைத்த மக்கள், மற்றும் சாயிபக்தர்கள் அனைவரும் மிகவும் பாக்கியசாலிகள்! பெரும் பேறு பெற்றவர்கள்!! எந்த க்ஷணமும் அழிந்துபோகும் எமது வாழ்வியல் இன்றைய நாளில் என்றும் அழியாத, சாந்தியைத் தரக்கூடிய "சாந்தம்" நிறுவப்பட்டு, விழா எடுக்கப் படுவது எமது ஆத்மீக வாழ்க்கைப் பயணத்தில் ஓர் சிறந்த மைல் கல்லாகும்.

*எல்லாமே நலமாக இயங்க வழிவகுத்த சாயிநாதன்*
*திருவடிகளை என்றும் மறவாது வாழ்த்தி வழிபடுவோமாக.*

*அன்பின் அடிமை*

## 1984 இல் நடைபெற்ற பாலவிகாஷ் நிகழ்ச்சிகள்







*அகில இலங்கை சமாதான நீதவானும், மண்டூர் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத் தலைவரும், கிழக்குப் பிராந்திய ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்களின் சேவை அமைப்பாளருமாகிய டாக்டர் ந. பிறேமதாசன் அவர்களின் ஆசியுரை.*

வன்னியின் சிகரமென விளங்கும் வவுனியா நன்நகரில் கண்கண்ட, நடமாடும், பேசும் தெய்வத்திற்கு மிக அழகான முறையில் ஸ்ரீ சத்ய சாயி "சாந்தம்" எனப் பெயரிட்ட, இம் மந்திரின் பிரதான காட்சிகள் பகவான் சாயியின் இருக்கையாம் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தியை அப்படியே பிரதிபலித்து நிற்பது. பிரசாந்தி செல்ல முடியாதவர்களுக்கு இலங்கையின் பிரசாந்தியாக அது விளங்குவது கண்டு நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

கலியுக அவதாரத்திற்கு ஆலயம் அமைக்கும் தொண்டில் ஈடுபட்ட வவுனியா ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய உறுப்பினர்களின் பணி புனிதமானது. பகவானின் நல்லாசிகள் தங்கள் ஒவ்வொருவருக்கும் மேலும் மேலும் கிடைக்க வேண்டுமென நானும், நான் சார்ந்துள்ள சமித்தி உறுப்பினர்களும் அவதார மூர்த்தியாம் சாயியை வேண்டி நிற்கிறோம்.

இந்நிலையத் தலைவர் திரு. சி. முத்துலிங்கம் ஜே.பி. அவர்களை நான் நன்கு அறிவேன். அன்னாரது தன்னலமற்ற அர்ப்பண சேவையால் இம் மந்திர் 02-11.98 அன்று திறப்புவிழாக் காண்கின்றது என்றால் மிகையாகா. இவரின் சாயிசேவையை இலங்கை எங்கும் வாழும் தூய சாயி அடியார்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள். பகவான் சாயியை நாம் எல்லோரும் விரும்புகின்றோம். ஆனால் பகவான் நம்மை விரும்புகிறாரா என்றால் அது கேள்விக்குறியே?

திரு. சி. முத்துலிங்கத்துடன் புட்டபத்தியில் தரிசன வேளையில் இருக்கும் சந்தர்ப்பத்தை பலமுறை பெற்ற என்னால் உங்கள் தலைவரை சுவாமி நேசிப்பதையும், அருகில் நெருங்கி வந்து வாழ்த்துக்கள் கூறுவதையும் நேரில் பலமுறை காண முடிந்தது. ஐம்பது முறை அவதாரத்தை தரிசித்த பாக்கியம் பெற்ற தலைவரின் தலைமைத்துவத்தில் இக்கட்டிடம் எழுப்பப்பட்டிருப்பது கண்டு நான் பெருமைப்படுவதுடன் இப்படிபட்ட ஒரு தலைவரை வவுனியா பெற்றிருப்பது நீங்கள் செய்த பாக்கியமே. எல்லாம் வல்ல சாயிநாதனின் கருணை மழை இன்று போல் என்றும் பொழியட்டும்என வாழ்த்தி எமது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்

என்றும் தங்களுடன்

சாயி சேவையில்

ந. பிறேமதாசன்
கிழக்குப் பிராந்திய சேவை இணைப்பாளர்.

*நற்செயலைச் செய்யும்போது நாற்புறங்களிலிருந்தும் எதிர்ப்பு வரும். இனிப்பு உண்ணும் போது காரமும் தேதைானே - பாபா -*

## பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்
## வவுனியா
## 1997/1998 ஆண்டிற்கான செயலறிக்கை
## முன்னுரை

பகவான் ஸ்ரீ சததியசாயி சேவா நிலையம் 1971ம் ஆண்டு ஓர் சுபதினத்தில் வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபர் ஸ்ரீ. செ. சிவஞானம் ஐயா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சமித்தியின் முதல் தலைவராக திரு. மு. நடராசா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவரைத்தொடர்ந்து டாக்டர். எஸ். இராஜதுரை. ஸ்ரீ. ஆ. தியாகராசா. டாக்டர். எஸ் நிரஞ்சன் ஸ்ரீ. எஸ் மயில்வாகனம். டாக்டர். எஸ். சின்னதுரை. ஸ்ரீ. தா. இராசேந்திரம் ஸ்ரீ.சி. முத்துலிங்கம் தலைவர்களாக சேவையாற்றி வருகின்றார்கள்.

பக்தர்கள் தொகை அதிகரித்து வர சமித்தியின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதநிலை ஏற்பட்டது. ஆனால் தற்போது பஜனை மண்டபத்திற்கு முன்னுள்ள இடத்தில் புதிய மந்திர் கட்டுவதென சமித்தியினால் தீர்மானம் எடுக்கப்பட்டு, புதிய மண்டபத்தில் ஒவ்வொரு கட்டுமானப்பணிக்கும் பகவானின் அருளும் ஆசியும் கைக்கூடியுள்ளன. இதனை நிறைவேற்ற பகவானின் அருட்கடாட்சம் யாவருக்கும் உந்து சக்தியாக வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அடுத்ததாக எமது சேவா நிலையத்தின் 1997/1998ம் ஆண்டிற்கான செயற்திட்ட அறிக்கையினைச் சமர்ப்பிக்கின்றேன்.

### *செயற் திட்ட அறிக்கை 1997/1998*

எமது நிலையம் சுவாமியின் வழிகாட்டலின்படி ஐந்து முக்கிய பிரிவுகளாகச் செயற்பட்டு வருகின்றது.

1. *ஆன்மீகப்பிரிவு*
2. *கல்விப்பிரிவு*
3. *சேவைப்பிரிவு*
4. *இளைஞர் அணி*
5. *மனித மேம்பாட்டு கல்விப்பிரிவு*

### *1. ஆன்மீகப்பிரிவு :*

#### I. *பஜனை*

நிலையத்தின் வாராந்த பஜனை ஒவ்வொரு வியாழனும் மாலை 6.00-7.00 மணிவரை நடத்தப்படுகின்றது. நாளாந்த பஜனை மாலை 6.00 - 6.30 மணிவரை நடாத்தப்படுகின்றது. போயா தினங்களிலும் மற்ற விஷேட தினங்களிலும் விசேட பஜனைகள் மாலை 6.00-700 மணிவரை நடாத்தப்பட்டு வருகின்றது. இதைத்தவிர இல்ல பஜனைகளும் கோயில் பஜனைகள் போன்றவையும் திருமண. பிறந்தநாள். ருதுசாந்தி. குடிபுகுதல் போன்ற விசேட வைபவங்களிலும் இல்லங்களில் மரணசடங்கிலும் பஜனைகள் நடாத்தி வருகின்றோம். பஜனைப் பயிற்சி வகுப்புகள் வியாழன் தோறும் ஒழுங்காக நடாத்தப்பட்டு வருகின்றன.

#### II. *நகர சங்கீர்த்தனம்*

ஒவ்வொரு மாத போயா தினத்திலும் இன்னுமொரு ஞாயிற்றுக்கிழமையுமாக மாதம் இருமுறை அதிகாலை 5.30 மணிக்கு ஓம்காரம். சுப்ரபாதம் இதனைத்தொடர்ந்து நகர சங்கீர்த்தனம் செய்து வருகின்றோம்.

#### III *தியானம்*

ஒவ்வொரு வியாழக்கிழமையும் பஜனை முடிவில் 12 நிமிட நேரம் தியானம் செய்து வருகின்றோம். அத்துடன் போயா தினங்களிலும் தியான வகுப்பு நடாத்தி வருகின்றோம்.

#### III. *சாதனை*

ஒவ்வொரு வருடமும் பகவானின் பிறந்த தினமான நவம்பர் 23ம் திகதிக்கு 45 நாட்கள் முன்பாக ஆரம்பித்து 30 நிமிடம் சாதனை செய்து வருகின்றோம். இச்சாதனையில் ஓம்காரம். அஷ்டோத்ரம். காயத்திரி மந்திரம். தமிழ் வேதங்கள், மந்திர செபம். தியானம் என்பன இடம் பெறுகின்றன.

## V. கல்வி வட்டம்

ஒவ்வொரு செவ்வாயிலும் பி. ப 6.30-7.45 மணிவரை கல்விவட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் சுவாமியின் போதனைகள், கேள்வி பதில்கள், மற்றும் பக்தர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள் என்பன ஆராயப்பட்டு பக்தர்களால் அறியப்படுகின்றது. மகிளா கல்வி வட்டம் மாதம் ஒரு முறை நடாத்தப்பட்டு வருகின்றது.

## VI. மகிளாபிரிவு பஜனை

ஒவ்வொரு மாதமும் 2 நாட்கள் மகிளா பஜனை ஒரு நாள் சமித்தி மண்டபத்திலும் பிறிதொருதினத்தில் இல்லங்களிலும் சுவாமி குறித்த நேரங்களில் ( பி. ப 3-4) நடைபெறுகின்றது.

## VII. ஆன்மீக சாதனை முகாம்

மூன்று மாதத்திற்கு ஒருமுறை அமைதியான ஓர் இடத்தை தெரிவு செய்து சாயி பக்தர்கள் ஒன்று கூடி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை சாதனா முகாம் நடாத்தி வருகின்றோம்.

## VIII. இலட்சார்ச்சனை

மகிளாபிரிவினர் மாதம் ஒருமுறை பெரும்பாலும் போயா தினங்களில் பி.ப 4.30 மணிக்கு சமித்தி மண்டபத்தில் இலட்சார்சனையும் திருவிளக்கு பூஜையும் நடாத்தி வருகின்றனர். இதில் ஏறக்குறைய 30 இற்கும் மேட்பட்ட பெண் அங்கத்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து விசேட பூஜையும் நடைபெறுகின்றது.

# 2. பாலவிகாஷ் பிரிவு:

## I. சிறுவர்களுக்கான ஆன்மீக கல்வி

பாலவிகாஷ் சிறுவர்களிற்கான ஆன்மீகக் கல்வி வகுப்புகள் நிலையத்திலும் பண்டாரிகுளம் இறப்பைக்குளம் ஆகிய இடங்களிலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் 1.30 மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. மொத்தம் 73 சிறுவர்கள் ஆன்மீகக் கல்வி பயில்கிறார்கள் மனித மேம்பாட்டு கல்வி வகுப்புகளும் மாணவர்களிற்கு நடாத்தப்பட்டு வருகின்றன 1997ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட கிழக்கு இலங்கை பாலவிகாஷ் பரீட்சையில் பிரிவு II ல் எமது மாணவர் ஒருவர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். இத்துடன் பாலவிகாஷ் மாணவர்களிற்கான இலவச ஆங்கில வகுப்பும் நடாத்தப்பட்டு வருகின்றது இவ்வாங்கில கல்வியை போதிப்பதற்கு எமது நிலையத்தால் பயிற்றப்பட்ட குருமார்களே செயலாற்றி வருகின்றார்கள். காலத்திற்கு காலம் இவர்களிற்கு சாயிஸ்தாபனத்தால் பயிற்சிகள், கருத்தரங்குகள் செயலமர்வுகள் என்பன நடாத்தப்பட்டு வருகின்றன.

## II. மாணவர் சேமிப்பு

இவ்வாண்டில் எமது பாலவிகாஷ் மாணவர்கள் தமக்கு கிடைக்கும் பணத்தை உண்டியலில் இடும் பழக்கத்தைக் கைகொண்டு வருவது பாராட்டுக்குரியது. உண்டியல் நிறைந்ததும் அப்பணமானது அவரவர் கணக்கில் வைப்புச் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறையும் புதிதாக சேமிப்பு புத்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

## III. பெற்றோர் தின விழா

6 மாதத்திற்கு ஒரு தடவை பாலவிகாஷ் மாணவர்களின் பெற்றோர் தினவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது அத்துடன் குருமார்கள் பெற்றோா் வீடுகளுக்கும் சென்று பிள்ளைகளின் ஆன்மீக, கல்வி முன்னேற்றம் சம்பந்தமாக கலந்துரையாடுகின்றனர். மே மாதம் 6ம் திகதி அன்னை ஈஸ்வராம்பாள் தினமும் செப்டம்பா மாதம் 2 வது ஞாயிறு பாலவிகாஷ் தினமும் கொண்டாடப்படுகின்றது. அத்தினத்தில் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், பஜனை என்பன இடம் பெறும். பாலவிகாஷ் பிள்ளைகளிற்கான வருடாந்த பற்சிகிச்சை முகாமும், கண் சிகிச்சை கிளினிக்கும் இவ்வாண்டு மே மாதம் நடாத்தப்பட்டன.

### IV. *நூல் நிலையம்*

பாலவிகாஷ் மாணவர்களிற்கான பிறிதான நூல் நிலையம் நடாத்தப்பட்டு வருகின்றது பாலவிகாஷ் பிள்ளைகள் சமித்தியின் எல்லா சேவைப்பணியிலும் கலந்து சேவையாற்றி வருவது சிறப்பான விடயமாகும்.

### V. *ஆன்மீகச் சுற்றுலா*

பாலவிகாஷ் மாணவர்களிற்கான இவ்வாண்டு சுற்றுலா கடந்த மாதம் உடப்பு காளிகோயில், முன்னேஸ்வரம் சிவன் கோயில், புத்தளம் இந்து மகாசபை ஆகிய இடங்களையும் நிகழ்ச்சிகளையும் தழுவியதாக அமைந்தது.

### VI. *மனித மேம்பாட்டுக் கல்வி*

(அ.) அதிபர்களிற்கான மனித மேம்பாட்டுக்கல்விக் கருத்தரங்கு வவுனியா கல்வித் திணைக்களத்தின் அனுசரனையுடன் 26.08.1998 அன்று கல்வித்திணைக்கள மண்டபத்தில் நடைபெற்றது. இதில் 28 அதிபர்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

(ஆ.) பாலர்பாடசாலை ஆசிரியர்களிற்கான இருநாள் மனிதமேம்பாட்டுக் கல்வி கருத்தரங்கு 27-28ம் திகதிகளில் ஆனிமாதம் நடைபெற்றது. இதற்கு வவுனியா கல்வித்திணைக்களம் தனது முழு அனுசரணையும் வழங்கி இருந்தது 46 பாலர் வகுப்பு ஆசிரியர்கள் பயிற்சி பெற்று பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## *3. சேவைப்பிரிவு:*

### I. *சிரமதானம்*

குறைந்தது மாதம் ஒருமுறை ஆலயங்கள், வைத்தியசாலை ஆகியவற்றில் சமித்தியின் சேவாதள தொண்டர்களினால் சிரமதான பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

### II. *நாரயாண சேவை*

பக்தர்களினால் சேகரிக்கப்படும் பிடிஅரிசி ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று மகிளா தொண்டர்களினால் மண்டபத்தில் சமைத்து பொதியாக்கப்பட்டு ஆண் தொண்டர்களினால் நாராயணர்களிற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வசதியற்ற குடும்பத்தினர்க்கு அரிசியாகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

### III. *ஆஸ்ப்பத்திரி சேவை (நோயாளர்களைப் பார்வையிடல்)*

ஒவ்வொரு புதன் கிழமையிலும் வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு தொண்டர்கள் சென்று பிற்பகல் 4.30 - 5.30 மணிவரை நோயார்களைப் பார்வையிட்டு அவர்களிற்கு ஆறுதல் கூறும் சேவை நடைபெற்று வருகின்றது.

### IV. *இரத்ததானம்*

வவுனியா ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கிக்கு தேவை ஏற்படும் நேரத்தில் எமது தொண்டர்கள் இரத்ததானம் செய்துள்ளனர். அத்துடன் சுவாமியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இரத்ததான தினத்தில் கடந்த வருடம் 33 தொண்டர்கள் இரத்தானம் செய்துள்ளனர்.

### V. *இலவச வைத்திய சேவை*

பின் தங்கிய வைத்திய வசதியற்ற கிராமமாகிய பொன்னாவரசங்குளம் கிராமத்தை தெரிவு செய்து மாதம் ஒரு முறை அங்குள்ள மக்களிற்கு இலவச வைத்திய சேவை நடாத்தி வருகின்றோம். இச்சேவையை நிலைய உபதலைவர் டாக்டர். எஸ். சின்னத்துரை ஐயா அவர்கள் தொண்டர் அணியின் உதவியுடன் நடாத்தி வருகின்றார்கள்.

## VI. *சுகாதார கல்வி*

வீட்டிற்கு வீடு சுகாதாரம், சுகாதார கல்வி போதனை, வைத்திய அதிகாரிகளின் அனுசரனையுடன் நடாத்தி வருகின்றோம். இவ்வருடத்திற்கு முதலாவது சுகாதார கல்வி வகுப்பு பொன்னாவரசங்குளத்தில் நடைபெற்றது. இதில் 50இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றி பயனடைந்தனர். இத்திட்டத்தை காலாண்டிற்கு ஒருமுறை மற்றைய இடங்களிலும் நடாத்த உத்தேசித்துள்ளோம்.

## VII. *முதலுதவி வகுப்பு*

சேவாதள தொண்டர்களிற்கும் இளைஞர் அணியினரிற்குமான முதலுதவி பயிற்சி வகுப்புகள் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. புதிய கட்டடத் திறப்புவிழாவைத் தொடர்ந்து துரித முதலுதவி பயிற்சி நெறியொன்று நடைபெற்றது. இதில் ஏறக்குறைய 42 பேர் வரையிலான இளைஞர் அணியினரும் சேவாதள தொண்டர்களும் கற்கை நெறியினை பூர்த்தி செய்தனர். இவர்களிற்கான செய்முறை பயிற்சியும் பரீட்சையும் ஒக்டோபர் மாதத்தில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

## VII. *குளோரின் இடல்*

வவுனியா நகரில் தற்போது ஏற்பட்டுள்ள வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக தொண்டர்கள் சுகாதார பகுதியினருடன் இணைந்து வைரவபுளியங்குளம, கற்குழி, தோணிக்கல் பிரதேசங்களிலுள்ள 170 கிணறுகளிற்கு குளோரீன் இட்டனர். அத்துடன் நோயைக்கட்டுப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்களும் கிராமமக்களுக்கு வழங்கப்பட்டன.

## IX. *பால்மா சேவை*

வவுனியாவிலிருந்து 12. கி. மீ. தொலைவிலுள்ள பொன்னாவரசங்குளம் கிராமத்தை எமது நிலையம் தத்தெடுத்து அக்கிராமமக்களின் மேம்பாட்டிற்கு பாடுபட்டு வருகின்றது. இக்கிராமத்திலுள்ள 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளிற்கு எமது சமித்தியின் மகிளாபிரிவினர் ஒவ்வொரு மாதமும் 19ம் திகதி சென்று ஒரு மாதத்திற்கு தேவையான பால்மா பக்கற்றுகளை வழங்கி வருகின்றனர். அத்துடன் அக்கிராமக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பாடுபட்டு வருகின்றது.

## X. *படக்காட்சி*

சுவாமியின் பிறந்த நாள் விழாக்கள், சொற்பொழிவுகள், மற்றும் கலைநிகழ்ச்சிகள் சம்பந்தமான படக்காட்சிகள் எம்மால் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

## XI. *வலது குறைந்தோர் தினம்*

பகவான் பாபாவினால் பிரகடனபடுத்தப்பட்ட வலது குறைந்தோர் தினமாகிய 26-07-98 அன்று பம்பைமடுவில் அமைந்துள்ள அன்னை திரேசா “அன்பகத்தில்” கொண்டாடப்பட்டது. இங்கு ஏறக்குறைய 70 பேர் வரை வசிக்கிறார்கள். எமது நிலையத்தொண்டர்கள் அவர்கயளுக்குரிய மதிய உணவு தயாரிப்போடு காலை சென்று மதிய உணவு தயாரித்து அளித்தனர். இதனைத்தொடர்ந்து பகவான் பாபாவின் வீடியோ படக்காட்சியும் பக்திபடம் ஒன்றும் காண்பிக்கப்பட்டது. மாலையில் தேநீர் விருந்துடன் அவர்களிற்குரிய உடுபுடவைகள் வழங்கப்பட்டு பஜனையுடன் இனிதே முடிந்தது.

## XII. *சாயி இலக்கியங்கள் விற்பனை*

காலத்திற்கு காலம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் சாயியின் இலக்கியங்கள், வீடியோ படம், சுவாமியின் படங்கள், பதக்கம், மோதிரங்கள் யாவும் இந்நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### XIII. *பாதுகை பாதுகாப்பு*

ஆலயங்களில் நடைபெறும் விசேட உற்சவங்களின் போது கோயிலிற்கு வருகை தரும் அடியவர்களின் பாதணிகளைப் பாதுகாத்துக் கொடுக்கும் சேவை செய்து வருகின்றனர். அண்மையில் கோயில் குளம் அகிலாண்டேஸ்வரர் கோயிலிலும் வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் கோயில் உற்சவத்தின் போதும் பாதுகைப் பாதுகாப்பு சேவை செய்துள்ளோம்.

### XIV. *பயிற்சிகள்*

சேவாதள தொண்டர்களிற்கான பூரண பயிற்சிகள் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டு முதலுதவிப் பயிற்சியில் சித்தியடைந்த பின்பே தொண்டர்களிற்கு கழுத்துப்பட்டி வழங்கி வருகின்றோம். சேவைபற்றிய ஒருநாள் பயிற்சி கருத்தரங்குகளும் நடாத்துகிறோம். சேவைபற்றிய அத்துடன் புதிதாக இணையும் தொண்டர்களிற்கு பூரண பயிற்சிவகுப்புகள் ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றோம்.

### XV. *கண்சிகிச்சை முகாம்*

கொழும்பு மிட்டவுன் அரிமா சங்கத்துடன் இணைந்து பார்வை குறைந்த வயோதிபர்களிற்கான மூக்குகண்ணாடியின் ஒரு தொகுதியானது. தலைவரின் முயற்சினால் பெறப்பட்டு வவுனியா ஆதாரவைத்திய சாலை கண் கிளினிக் ஊடாக வழங்கப்பட்டது.

**இச்சந்தர்ப்பத்தில் எமது நிலையத்தில் இனிவரும் காலங்களில் நடாத்த எண்ணியுள்ள சேவைகளின விபரம் வருமாறு.**

அ. ***இலவச பொலி கிளினிக் (Poly Clinic) -*** புதிய கட்டடம் திறக்கப்பட்ட பின் சாயி பக்தர்களான வைத்தியர்களின் துணைக்கொண்டு இலவச வைத்தியசேவையொன்றை வாரத்திற்கு ஒருமுறை ஏழை எளிய மக்களிற்கு நடாத்த எண்ணியுள்ளோம்

ஆ. கண் சிகிச்சை முகாம் ஒன்றை நவம்பர் மாத இறுதியில் நடாத்துவதற்கான முயற்சியை இப்பொழுதிலிருந்தே செய்து வருகின்றோம்.

## 4. ***இளைஞர் அணிச் சேவைகள்:***

உருவாகப்போகும் சாயிசாம்ராச்சியத்தின் அத்திவாங்கள் என சுவாமியினால் ஆசீவதிக்கப்பட்ட இளைஞர் அணியானது சமித்தித் தலைவரின் வழிகாட்டுதலின் கீழ் துடிப்பாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

### I. *இலைக்கஞ்சிச் சேவை*

வவுனியா நகரில் அமைந்துள்ள அகதி முகாம்களிலும் ஆஸ்பத்திரிகளிலுள்ள போசாக்கு குறைந்த சிறுவர்களிற்குமான இலைக்கஞ்சி வழங்கும் திட்டமொன்றை திறம்பட நடாத்தி வருகின்றனர். தினமும் காலையில் காய்ச்சப்படும் கஞ்சியானது சுகாதாரப் பகுதியினால் முகாம்களிற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு தினமும் ஒவ்வொரு சாயி அடியார்கள் அதற்குள்ள செலவினங்களை ஏற்றுள்ளனர்.

### II. *ஆஸ்பத்திரி சேவை*

புதன் கிழமை தோறும் மாலை 4.30-5.30 மணிவரை வவுனியா ஆதார வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளர்களைச் சந்தித்து ஆறுதல் கூறும் பணியில் இளைஞர்கள் மிக ஆர்வமாக பங்கெடுத்து வகின்றனர்.

### III. *ஆஸ்பத்திரி பஜனை*

நோயாளர்களின் நலம் வேண்டி ஒவ்வொரு மாத இறுதியிலும் ஆஸ்பத்திரி வளவினுள் அமைந்துள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் பிரார்த்தனை, பஜனை என்பன இளைஞர் அணியினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

IV. புதியகட்டடத் திறப்புவிழாவினை முன்னிட்டும் நிலைய வளவிலும் மற்றும் வவுனியா வைத்தியசாலை, கோயில்கள் என்பவற்றிலும் சிரமதானங்களைக் காலம் தோறும் செய்து வருகின்றனர்.

## V. பாதுகை பாதுகாப்பு

கோயில் உற்சவங்களின் போது பாதுகை பாதுகாப்பு சேவையானது இளைஞர் அணியினால் திறமை நடாத்தப்படுவதுடன் பக்தர்களிடையே மிகுந்த நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

## VI. கல்விவட்டம்

இளைஞர் அணிக்கான கல்விவட்டம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 5.30 - 6.30 மணிவரை நடைபெற்று வருகின்றது. இதில் பகவானின் விசேட செய்திகள், மனித மேம்பாட்டு கல்விபற்றிய விளக்கங்கள் தலைவரினாலும் கல்வி வட்ட நிர்வாகியினாலும் வழங்கப்பட்டு வருகின்றன.

## VII. தலைமைத்துவப் பயிற்சி

இளைஞர் அணிக்கான தலைமைத்துவ பயிற்சி நெறியொன்றை ஸ்ரீ. ஆ. சுந்தரலிங்கம் அவர்களால் ஆனி மாதம் 26ம் திகதி நடாத்தப்பட்டது. இதில் 22 இளைஞர் அணி அங்கத்தவர்கள் பங்கு பற்றி பயனடைந்தனர்.

## VIII. மனிதமேம்பாட்டுக் கல்வி

வவுனியா மாவட்டத்தில் முதன் முதலாக கல்வித்திணைக்களததின் அனுசரணையுடன் பாலர் வகுப்பு ஆசிரியர்களிற்கான மனிதமேம்பாட்டு கல்விபற்றிய கருத்தரங்கு ஆனி மாதம் இங்கு நடைபெற்றது. இதன் ஒவ்வொரு செயற்பாட்டிலும் இளைஞர் அணியினர் மிகச்சிறப்பாகத் தொண்டாற்றி வந்திருந்தமை அனைவரினதும் நன்மதிப்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

## IX. பிடிக்காசு திட்டம்

இளைஞர் அணி தொண்டர்களும் மற்றையோரும் தமது ஆசைகளிற்கு வரம்பிட்டு சேமிக்கப்படும் பிடிகாசு திட்டமானது சமித்திக்கு வழங்கப்பட்டு சமித்தியனால் நடாத்தப்படும் நல்ல சேவைகளில் முக்கிய பங்கெடுத்து வருகின்றது.

எல்லா தொண்டர்களும் தங்களுடைய வருமானத்தில் 5 வீதத்தினை சாயி சேவைக்கு வழங்குவதாக உறுதிபூண்டு அதன்படியே ஒழுகி வருகின்றனர். பக்தர்களும் தொண்டர்களும் சமித்தியின் புதிய கட்டட நிலைய திறப்பிற்குத் தொண்டாற்றி, பங்காற்றி சமித்தியின் சேவைகளை விஸ்தரிப்பதற்கு தம்மை அர்ப்பணிப்பதன் மூலம் பகவான் பாபாவின் தெய்வீக அருட்கடாட்சத்திற்கு தகுதி உடையவர்களாக தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் ஆக்கமும் ஊக்கமும் உணர்வும் இயக்கமும் எல்லாம் அந்த இறைவனே என்று "சாந்தம்" இன்று கம்பீரமாக எழுந்து நிற்கிறது. இனிவரும் காலங்களில் பல்லாயிரக்கணக்கானவர்களின் துயரினை போக்கவும் பிணியினைக் களையவும் மனத்திற்கு சாந்தியை அளிக்கவும் இச்சாந்தம் முன்னணியில் திகழவும் உறுதுணையாய் நிலைக்கவும் எல்லாம் வல்ல பாபாவின் பாதார விந்தங்களை வணங்கி இவ் அறிக்கையை சுவாமியின் பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

**சாயி சேவையிலுள்ள**

**வைத்திய கலாநிதி. சிவப்பிரகாசம். அனுஷ்யந்தன்**
**செயலாளர்.**
**14.09.98**

**9, உள்வட்ட வீதி,**
**வவுனியா.**

*உண்ணாமல் நோன்பு நோற்பதைவிட*
*பசியுடன் இருக்கும் ஒருவனுக்கு*
*விருந்தளிப்பதே சிறப்பானது. - பாபா -*



1996 வலது குறைந்தோர் தினத்தில்
அப்போதைய செயலாளர் ஸ்ரீ.சி.
இரகுநாதபிள்ளை அவர்களினால் உடுப்பு
வழங்கப்பட்டது.



1994 இல் நடைபெற்ற முதலுதவிப் பரீட்சையில்
சித்தியடைந்தோர்களுக்கு
ஸ்ரீ. எஸ். தில்லை நடராஜா அவர்களினால்
சான்றிதல் வழங்கும் காட்சி




1994 இல் நடைபெற்ற சேவாதளப்
பயிற்சி முகாம்







02-03-1990 இல் வவுனியா ஆதார வைத்திய சாலையில் முதல் முதலாக இரத்தவங்கி ஆரம்பிக்கப்பட்டபோது வவுனியா சேவா சமித்தியினரால் இரத்ததானம் செய்யப்பட்ட காட்சியும் பங்குபற்றியோர் படமும்









1983ம் ஆண்டு வவுனியா - சாயி சேவா நிலையத்தினால் கல்மடு என்ற கிராமத்தில் நடாத்தப்பட்ட முதலாவது நடமாடும் வைத்திய சேவைமுகாம்



1996ம் ஆண்டு பாவற்குளம் யூனிற் 4 இல் நடைபெற்ற வைத்திய முகாமை கற்போதைய பிரதி மாகாணசுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. இளங்கோ அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தல். செயலாளர் சி. இரகுநாதபிள்ளை சமூகமளித்த வைத்தியர்களை வரவேற்கிறார்.





பொன்னாவரசங்குளம் கிராமத்தில் மாதம் இருமுறை நடைபெறும் இலவச நடமாடும் வைத்திய சேவை முகாம்

35694



1998-06-27ம் திகதிகளில் நடைபெற்ற ஆரம்பபாடசாலை ஆசிரியர்களுக்கான மனிதமேம்பாட்டு கல்வி கருத்தரங்குத் தொடக்கவிழா

# ஓம் சாய்ராம்
# அன்னதானம் (நாராயண சேவை)

அன்னதானங்களைச் செய்கின்றோம், சில நற்காரியங்களைச் செய்கின்றோம் பரோபகாரங்களைச் செய்கின்றோம். இவையும் கூட ஆன்மீக சம்பந்தமான காரியங்கள் அல்லவா? எனக்கேட்கிறார்கள். இத்தகைய காரியங்கள் நல்லவகைகளாக இருந்தபோதிலும் இவை பரோபகாரம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. ஆனால் இவை பரோபகாரங்கள் அல்ல. இதற்கு முன்பு கூறியதைப் போன்று எந்தக் காரியங்களைச் செய்த போதிலும் தனக்காகத்தான் செய்து கொள்வது போன்று இந்த அன்னதானங்களும் கூட தனக்காகவே செய்து கொள்ளப்படுகின்றன. இது எப்படி? எனச் சிலபேருக்குச் சந்தேகம் ஏற்படலாம் இதற்கு ஒரு சிறிய உதாரணம்;

ஒரு நபர் தன்னோடு பணிபுரியும் நண்பர்கள் அனைவருக்கும் விருந்து வைக்கின்றார். மேலும் ஏழையெளியோருக்கு அன்னதானமும் செய்கின்றார். இவர்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றார். இது பரோபகாரம் சம்பந்தமானவர்கள் என கூறிக்கொள்கிறார்கள். பரோபகாரம் என்றால் பிறருக்கு உதவி செய்தல் என்பது பொருளாகும். பிறர் என்றால் தனது வீட்டிட்கு யார் யார் வருகிறார்களோ அவர்களனைவரும் பிறர்களே! அந்தப் பிறரோ தானும் ஒருவராகச் சேர்ந்து கொள்கிறார் அல்லவா? ஆகவே அந்தப் பிறரோடு தானும் ஒருவராகச் இருக்கும்பொழுது அந்த உபகாரம் செய்ததில் தனக்கும் கூடப் பங்கு இருக்கிறது அல்லவா? எந்தெந்த நபர்களுக்கு என்னென்ன செய்தாரோ அந்த அளவு பயன் தனக்கும் கூட இருக்கிறது. எனவே இவை தன்னலப்பணிகளேயன்றி, பரோபகார சம்பந்தமான பணிகளாகக் கணக்கிடுதல் கூடாது. இவ்வளவு பேருக்கு விருந்தளித்தோம் என்கின்ற பாவனையும், அந்த மகிழ்ச்சியின் பயனும் இவ்விரண்டும் தனக்கே சேருகின்றன. ஆகையால் நாம் எவருக்கு எந்த வேலை செய்த போதிலும் நமக்கு நாம் செய்து கொள்கின்றோம் என்கின்ற முழுமையான பாவனையோடு நாம் கிரகித்துக் கொள்ள வேண்டும். (சனாதன சாரதி - 1980 செப்டம்பர் பக்கம் 10ல்.)

நாராயண சேவை :- இந்த நடவடிக்கை ஆத்மீகமயமாக்கப்பட வேண்டும். அதற்குத் தனிப்பட்ட சாதனையின் ஓர் அம்சமாகப் பிடி அரிசி எடுத்து வைக்கப்பட்டு அப்புறம் ஒன்று சேர்க்கப்பட வேண்டும். அங்கத்தவர்களால் ஒரு பொது இடத்துக்கு கொண்டுவரப்பட்டு மகிளாபிரிவிடம் ஒப்படைக்க வேண்டும். உணவு தயாரானவுடன் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடு செய்யும் முறை இதுதான். அப்போதுதான் அதன் உட்பொருள் உணரப்படும். அரிசி ஒரு பொது இடத்துக்கு கொண்டு வரப்படும்போதோ அல்லது ஒரு தொண்டர் சென்று அதை எடுக்கும்போதோ அது பசி தேவை உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டதா என்று உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நாராயண சேவை என்பது கடைத் தெருவிலிருந்து விலைக்கு உணவைப் பெற்று பகிர்ந்தளிப்பது அல்ல "மாணவ சேவையே மாதவ சேவை"

-பாபா- (சேவாதள கையேடு - பக்கம் 30)

நம்மைவிட தாழ்ந்த நிலையில் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் கூட இல்லாமல் வறுமையில் வாடுபவர்கள் கவனிப்பார் யாருமின்றிப் புறக்கணிக்கப்பட்ட அநாதைகள் போன்றோரே தரித்திர நாராயணர் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கே சேவை செய்திட வேண்டும். அப்படிச் சேவை செய்யும் போது சமத்துவ நிலையில் இவர்களிடம் உள்ள நாராயணனுக்கே செய்யும் சேவையாகக் கருதியே செய்ய வேண்டும். (சனாதன சாரதி - 1987 டிசம்பர் - பக்கம் 2 )

சுவாமியின் சொற்பொழிவிலிருந்து தொகுத்தளித்தவர்
சி. முத்துலிங்கம்

*ஜெய் சாய்ராம்*



புட்டபர்த்தியில் சுவாமியின் மேற்பார்வையில் நடைபெறும் நாராயண சேவை



நாளாந்தம் அகதி முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்படும் இலைக்கஞ்சி



பூரணை தினங்களில் நாராயணர்களுக்கு பகிர்ந்தளிக்க எடுத்துச் செல்லும் உலர்வு பார்சல்



மாதந்தோறும் பூரணை தினத்தில் நடைபெறும் நாராயண சேவைக் காட்சிகள்



போசாக்கு உணவான இலைக்கஞ்சியை பாவற்குளம் கிராமத்தில் சிறார்களுக்கு வழங்கும் காட்சி.



23 நவம்பர் 1996 அன்று தொடங்கி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரும், போசாக்கற்ற சிறுவர்களுக்கான இலைக்கஞ்சி தயாரிப்பை சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் பார்வையிட்டு அகதிமுகாம்களுக்கான விநியோகத்தை மேற்கொள்ளும் காட்சி



வவுனியா சாயி நிலையத்தினால் தத்தெடுக்கப்பட்ட பொன்னாவரசங்குளம் கிராமத்தில் மாதந்தோறும் 19ம் திகதி நடைபெறும் பால்மா வழங்கும் சேவையும் மனித மேம்பாட்டுக் கல்வியில் ஈடுபடும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்குதல். கிராமத்தவர்களுக்கு புடவை வழங்கும் காட்சி.





1994ம் ஆண்டு நிலையத்தால் பயிற்றப்பட்ட சாயி குருமார்.



பாலவிகாஸ் மாணவர்கள், ஆன்மீக சுற்றுலா மேற்கொண்டு மிகிந்தலை சென்றபோது அங்கு மதிய உணவு பரிமாறும் காட்சி



1992 இல் நிலைய சமையல் கூட திறப்புவிழாவன்று பாடகர். இரா.சிவஅன்பு அவர்களின் சாயிகதா பிரசங்கம் செய்யும் காட்சி



ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி தினத்தில் வவுனியா கோயில் குளம் சிவன் கோவிலில் இடம் பெறும் சாயி பஜனை



1-1-1998 இல் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ.செ. சிவஞானம் ஐயா அவர்கள் சாந்தி ஆண்டை ஆரம்பித்து உரையாற்றும் காட்சி.



25-12-1997 இல் கிறிஸ்மஸ் தினத்தில், வவுனியா இறம்பைக்குளம் ஆலய பங்குதந்தை வண.நவரட்ணம் அடிகள் உரையாற்றும் காட்சி.

**ஓம் ஸ்ரீ சாய் ராம்**

# ஆன்மீகத்தில் பெண்களின் பங்கு

எல்லா உணர்வுகளையும் கடவுளுடன் சம்பந்தபடுத்தி மனிதத்தன்மை மூலம் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தலே ஆன்மீகம் எனப்படும். முதலில் மனிதன் தன்னிடமுள்ள விலங்குணர்வை விலக்குதலே தலையாய கடமையாகும். எப்பொழுதும் தெய்வீகத்தத்துவத்தின் நினைவில் தோய்ந்து வாழ வேண்டும் ஒருவருடைய ஆன்மீகச் செயல்கள் தடைபடுவற்கான ஆறு காரணங்களை ஸ்வாமி கூறியுள்ளார்.

1. *தேவைக்கு அதிகமாக உண்பது, தேவைக்கு அதிகமாக பணம் சேர்ப்பது.*
2. *கிடைக்காத உலக பொருட்களுக்காக பாடுபட்டு நேரத்தை வீணடிப்பது.*
3. *தேவையற்ற விஷயங்களைப் பேசி நேரத்தை வீணடிப்பது.*
4. *ஆன்மீகக் கோட்பாடுகள் தன் முன்னேற்றத்துக்குத்தான் என்பதை மறந்து தனக்குத் தோன்றிய வகையில் செயல்படுவது.*
5. *தன் ஆன்மீக முன்னேற்றத்தை சிந்தியாது உலகியல் எண்ணங்களில் தீவிரமாக கவனம் செலுத்துபவரிடம் உறவு வைத்துக்கொள்வது.*
6. *ஆன்மீகத்திற்கு பொருந்தாத உலகியல் வெற்றிகளுக்கு பேராசை கொண்டு அதைப் பெரிதாக நினைத்தல் என்பனவாகும்.*

தொன்று தொட்டு இந்நாட்டிலுள்ள பெண்களின் புனித ஆற்றல்கள் போற்றப்பட்டு வந்துள்ளது. அதனாலேயே வேதத்தில் அன்னையாக "காயத்திரி" பூசிக்கப்பட்டாள். ஆனால், மந்திரத்தை பெண்கள் கூறக்கூடாது என சில மூடக் கொள்கைகள் உண்டு. இதற்கு அவர்களின் அறியாமையே காரணமாகும். ஆன்மீக செயல்பாடுகளுக்கு பெண்களே சிறப்பபான முறையில் செயற்படுவதாகவும் காயத்திரி மந்திரத்தை பெண்கள் கூறலாம் எனவும் ஸ்வாமியே கூறியுள்ளார். நாற்பத்தைந்து நாள் சாதனைக்கும் அதை எல்லோரும் கூறும்படியும் பணித்துள்ளார். யாக்ஞவல்லிய முனிவர் தன் மனைவி மைத்திரேயிற்கு சகல வேதமந்திரங்களையும் போதித்திருக்கிறார்.

வீட்டில் சிறு பிள்ளைளை சிறுவயதில் இருந்தே இறைநம்பிக்கை உள்ளவர்களாக ஆக்கி அன்றாட வாழ்க்கையில் ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதில் பெண்களே முக்கிய பங்கு வகிக்கிறார்கள். வீட்டில் பெயர் எடுக்க, வெற்றி பெற கௌரவம் பெற பெண்களே முக்கிய காரணமாவர்கள். மங்கள இல்லத்தின் தலைவியாக அவள் கிரகலஷ்மி எனப்படுகிறாள். பெண்களுக்கு ஏழு விதமான ஆற்றல்கள் உண்டு, சத்யம், பிரேமை, தர்மம், தியாகம், சஹனம், ஸ்வானுபூதி, ஆனந்தம் ஆகிய அனைத்தையும் கொண்டவளே பெண். பெண்மணிதான் தருமத்தைத் தாழ்வுறாது நிலைநிறுத்துகிறாள். பிரமச்சாரியம், கிரகஸ்தம், வானபிரஸ்தம், சந்நியாசம், ஆகிய நான்கையும் போஷிப்பது பெண்களே.

யாக்ஞவல்லியர் போன்ற பேரறிஞர்கள் இருந்தும் ஜனகமகாராஜா காக்கியரிடமிருந்தே அறிஞர் பட்டம் பெற்றார். யோகிகள், முனிவர்கள், சாதுக்கள் அனைவரும் அக்காலத்தில் பெண்களைப் போற்றினார்கள். கல்வியின் காரணமாகவும் பெண்களை விளையாட்டுப் பொருளாகவும் வெறும் பொம்மைகளாவும் கருதுகிறார்கள். அது தவறாகும். இல்லாள் என்ற பெயருக்கேற்ப பெண், வீட்டை நிர்வகிப்பதோடு, கணவன், குழந்தைகளின் நலத்தையும் கவனித்துக்கொள்கிறாள். தர்மபத்தினி, அர்த்தாங்கி என்ற பட்டங்களையும் பெறுகிறாள். செயல்முறைகள், பாவனை, தியாகம், குணநலன்கள் இவற்றின் காரணமாக இப்பெயர் பெண்ணுக்கு அளிக்கப்பட்டன. கோயில்களில் முக்கிய கிரிகைகள் நடாத்தும் ஆசாரியர்கள் தங்கள் தர்மபத்தினி இல்லாமல் எக்காரியமும் செய்யத் தகுதியற்றவர் ஆகின்றார். காஞ்சி காமக்கோடி பீடாதிபதிகள்கூட பெண்கள் மந்திரம் சொல்லத் தகுதி உடையவர்கள் எனக்கூறியுள்ளார்கள். அதேபோல் பகவானும் இலட்சா அர்ச்சனை தனிய பெண்கள் செய்ய வேண்டும் எனவும் தன் ஐந்து பெரும் பிரிவில் "மகிளவிபாக்" என ஒரு பிரிவை ஏற்படுத்திப் பெண்களுக்கு தனிமுக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஆகவே ஆன்மீகத்துக்கு

முதுகெலும்பு போன்றவர்கள் பெண்களே.

பண்டையகாலத்து ஞானிகள் முனிவர்கள் தன் மனைவியின் துணையுடன்தான் யாக, யக்ஞங்கள் அனைத்தையும் செய்தனர். அவர்கள் அப்படிச் சகல ஒத்துழைப்பும், சேவையும் செய்திருக்காவிட்டால், இவர்கள் பெரிய ஞானியாகவோ, யோகியாகவேப ஆகியிருக்க முடியாது.

ஆகவே ஆன்மீகத்தில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெண்களே. எந்த நாடாயினும் அது தாய்நாடு என்றே அழைக்கப்படுகிறது. தந்தைநாடு என அழைக்கப்படுவதில்லை. தெய்வங்களின் பெயரைக் கொண்டாலும் பார்வதி பரமேஸ்வரன், லஷ்மி நாராயணன், சீதாராமன எனப் பெண்களுக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது.

நாகாசுரனை வதம் செய்ய கிருஷ்ணனுக்கு உதவியது பெண் சத்தியபாமா, வனகபாசத்தில் பாண்டவருக்கு உதவியது பெண் திரௌபதை. சத்தியவானை இயமனிடமிருந்து திருப்பிப் பெற்றவள் சாவித்திரி. இராவணன் தீயவழியில் சென்றபோது புத்திகூறி நல்வழிப்படுத்த முயன்றவள் மண்டோதரி. அத்திரி முனிவரின் மனைவி அனுசயா திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கி அன்னம் பரிமாறி தெய்வத்தைவிட மேன்மை அடைந்தாள். தொழுநோயால் வருந்திய கணவருக்கு சூரியனின் உஷ்னம் பொறுக்க முடியாதபோது சூரியனையே சஞ்சரிக்காமல் செய்தவள் நளாயினி. தான் கொண்ட சத்ய விரதத்தின் மகிமையால் பெரும் காட்டுத் தீயை அணைத்த சந்திரமதி. தீ மூட்டி அதில் நின்றும் துன்புறாது வெளிவந்து தன் கற்பின் திறத்தை நிரூபித்தவர் சீதா பிராட்டியார். தன்னைத் துன்புறுத்த வந்த வேடனை கற்பின் வலிமையால் எரித்தாள் தமயந்தி. இப்படியாகப்பலர் நமது வரலாற்றிலே இடம் பெற்றுள்ளார்கள். இன்னும் ஆன்மீகச் சாதனையில் முன்னேறி இறைவனையே அடைந்த திலகவதியார், காரைக்காலம்மையார், சாராதாமணிதேவி, மங்கையர்கரசியார், ஔவையார் போன்றோரை நாம் அறிவோம். சந்நியாசம் பெற்ற ஒரு மகனை அவர் தந்தையார் கண்டால் அவரை விழுந்து வணங்காவிட்டால் அந்தத் தந்தைக்கு நரகம் கிட்டும் எனவும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. இறைவனையே தாயாக கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

" தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பி" என்றும்
" தாயிற் சிறந்த தயவான தத்துவனே" என்றும்
" எவ்வுயிர்க்கும் தாயானானை" என்று பெரியபுராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

பெண்ணின் பெருமையை நிலைநாட்டவும் பண்டைய புனித கலாசார தர்மத்தை நிலைநாட்டவும் ஒவ்வொரு மாதத்தின் 19ம் திகதியும் " மகிளா" தினமாகக் கொண்டாடும்படி பகவான் பிரகடனப் படுத்தியுள்ளார். பழங்காலம் முதல் பெண்கள் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டனர். நாட்டின் மானத்தைக் காக்க உயிர் துறந்த பத்மினி நாட்டின் விடுதலைக்காக உயிர் துறந்த ஜான்சிராணி ஆகியோர் போற்றப்படுகின்றனர். பெண்களை பலவீனமானவர் என்றோ பயனற்றவர் என்றோ கருதலாகாது. அவர்கள் தெய்வீக ஆற்றல் உள்ளவர்கள். மாபெரும் சக்தி அவர்களிடம் உள்ளது. ஒவ்வொருவரும் தர்ம நெறிப்படி செயல் புரிய வேண்டும். கடமையை முறையாக நிறைவேற்ற வேண்டும். உங்கள் பொறுப்பை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என ஸ்வாமி கூறுகிறார். ஆன்மீக சாதனையில் ஈடுபடும் பெண்கள் துன்பப்படும் அனைவரிடத்தும் மாசு மறுவற்ற அன்பை பொழியவும், வறியோர்க்கும், அவலப்படுவோருக்கும் சேவை செய்யவும் ஆயத்மாக இருக்க வேண்டும் என்றும் ஆண்டவன் மேலும் அசைக்க முடியாத நம்பிக்கையினால் அதிமோசமான துன்பங்களையும் துயரங்களையும் அவன் சங்கற்பத்திற்குப் பணிந்து மகிழ்ச்சியோடு தாங்கிக்கொள்ள வேண்டும்.

தாயானவள் உடலாலும் மனத்தாலும் வலிமைப்பெற்றிருக்க வேண்டும். குணத்திலும், பண்பிலும் பண்பட்டிருக்க வேண்டும். தெய்வீகச் சிந்தனைகளால் புனிதப்பட்டவர்களாய் அன்பிலும் சுய அர்ப்பணிப்பிலும் ஊறிப்போனவளாய் இருக்க வேண்டும். நல்ல தாய்மாரே நல்ல தேசமக்களை உருவாக்குகிறார்கள். பெண்ணின் தியாகத்தை விளக்க திருமணத்தின்போது புரோகிதர் மணப்பெண்ணை ஒரு மந்திரம் சொல்லச் சொல்லுகிறார். அந்த மந்திரத்தின் மூலம் மணப்பெண் தன் கணவனை தனக்கு மூன்று வரம் தரும்படி கேட்கிறார்.

1. தர்மேசா - உங்கள் இல்லத்தையும் குடும்ப கௌரவத்தையும் சிறந்த முறையில் காப்பாற்ற எனக்கு அனுமதி அளியுங்கள்

2. அர்த்தேசா - உங்கள் இல்லத்துச் செல்வங்களைக் கட்டிக் காப்பாற்றி நன்கு நிர்வகிக்க எனக்கு அனுமதி கொடுங்கள்.

3. காமேசா - உங்கள் எல்லாத் தேவையையும் நிறைவேற்ற எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்கிறாள். இம்மூன்று வரத்திலும் அவள் தனக்கென எதையும் கேட்கவில்லை. எல்லாம் தன் கணவனுக்காகவே கேட்கிறாள். பெண் தியாகத்தின் சின்னம். பெண்ணின் ஆன்மீக முன்னேற்றத்தை விளக்க உதாரணமாக ஸ்வாமி கூறிய கதை :- ராமானந்தர் சந்நியாசியாக மாறினார். சித்திரக்கூட மலையில் இருந்துகொண்டு ஆன்மீகக் கருத்துக்களைப் பரப்பினார். மக்கள் பலர் அவர் சொற்பொழிவை வந்து கேட்டனர். அத்தகைய மக்களிடையே அவர் மனைவியும் இருந்தாள். ராமானந்தர் பேசிக்கொண்டிருந்த போது அக்கூட்டத்தில் தன் மனைவியைக் கண்டார் தன் பார்வையை வேறுபக்கம் திருப்பிக்கொண்டார். சொற்பொழிவு முடிந்த பின் அவர் மனைவி அவர் அருகில் வந்து "ஸ்வாமி நீங்கள் சன்னியாசி. அனைத்தையும் துறந்தவர். ஆசையொன்றும் தங்களிடம் இல்லை என்று நினைத்து தாங்கள் கூறுவதை கேட்டு வந்தேன். தாங்கள் உருவத்தை மாற்றிக் கொண்டீர்களே தவிர பாவனையை மாற்றிக்கொள்ள வில்லை. என்னைக் கண்டதும் மனைவி என்ற பாவனை தோன்றி தங்கள் பார்வையை திருப்பிக்கொண்டீர்கள். பாவனைகள்தான் அனைத்துக்கும் காரணம். தங்களால் தெய்வத் தத்துவத்தை அடைய முடியாது" என உபதேசித்தாள். ராமானந்தா பின் தன் பாவனைகள் எல்லாவற்றையும் விலக்கி முழுச் சன்னியாசியாக மாறினார். இதிலிருந்து ஆன்மீகத்திற்கு பெரும் பங்கு வகிப்பவள் பெண் எனக் அறியக்கூடியதாக உள்ளது.

"பெண் இனம் அடித்தளமானது அதிலிருந்து அமைதி நிறைந்த ஆனந்த உலகம் உருவாகும். பெண் உண்மையாகவும் தைரியமாகவும், இரக்கமுள்ளவராகவும், கருணை நிறைந்தவளாகவும் இருக்கும்போது உலகில் அமைதியும் ஆனந்தமும் உள்ள சகாப்தம் உருவாகும்."

*பகவான் பாபாவின்*
*சொற்பொழிவுகளில் இருந்து தொகுத்தளித்தவர்*
*ஸ்ரீ மதி. சு. தம்பித்துரை.*
*மகிளா தலைவி.*

*நாம் செய்யும் தவறுகளைப் பிறர் சுட்டிக் காட்டினால் , அவருக்கு மறவாமல் நன்றி கூறுங்கள்.* – பாபா –



தியான வகுப்பு
நடைபெறும் காட்சி



நிலையத்தால் நடாத்தப்படும்
இலவச தையல் வகுப்பு ஓராண்டு
முடிவுபெற்று வெளியேறும்
மாணவர்களும், ஆசிரியையும்
மகிளா தலைவியும், செயலாளரும்.



1996 நவம்பர் 19ம் திகதி மகிளா பஜனையும்
பங்குபற்றிய மகிளா பிரிவினரும்.



எமது பஜனையில் பங்கு பற்றிய முன்னாள் கல்விப்
பிரதி அமைச்சரும் வன்னி பாராளுமன்ற
உறுப்பினருமாகிய ஸ்ரீமதி இரா. புலேந்திரன்,
முன்னாள் சுகாதார அமைச்சரும்,நுவரெலியா
பாராளுமன்ற உறுப்பினருமாகிய திருமதி ரேணுகா
ஹேரத் அவர்களும்.



கிறிஸ்மஸ் தினத்தில் இளைஞர் அணியினரின் நத்தார் கரோல் இசை நிகழ்ச்சி.






1998ல் வலது குறைந்தோருக்கான சேவை, பம்பைமடு அன்னை திரேசா அன்பகத்தில் இளைஞர் அணியினரின் சேவை.



இளைஞர் அணி தொண்டர்கள் சிரமதானத்தில் ஈடுபடும் காட்சி.



1997 போலியோ தினத்தில் போலியோ தடுப்புச் சொட்டு மருந்தை இளைஞர் அணி தொண்டர் சிறுவன் ஒருவனுக்கு புகட்டுகின்றார்.

*சாந்தம் தெய்வீகமானது*

*"சாயி மார்க்கம்" தனது*

*வாழ்த்துக்களை அறிவித்து மகிழ்கிறது.*

**பேராசிரியர் செ. நந்தி**

**ஆசிரியர் - சாயி மார்க்கம்**

**சத்திய சாயி மனித மேம்பாடுக் கல்வி**

**தேசிய (தமிழ்) அமைப்பாளர்.**

*தன்னலமற்ற தொண்டு, கலப்படமற்ற தங்கத்திற்கு ஒப்பானது. - பாபா -*

## ஓம் ஸ்ரீ சாயிராம்

## *சாயி அன்பர்களுககு பகவானின் அருளுரை*

நீங்கள் ஒவ்வொருவரும் பணி ஆற்ற் வேண்டிய கால கட்டத்தில் எனது நோக்கம் வந்தடைகிறது. இந்த பரந்த அகிலத்தில் இருக்கும் இந்த பூமிக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக்கம் இப்போது ஒவ்வொருவர் கண்மீதும் விரிகிறது. பக்தி எனும் பலத்தை வெளிப்படுத்தும் போது உங்கள் பகுதியை ஒழுங்காக செய்வதற்கு என்னை மையமாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களது இதய சுத்தத்தை பிறரிடம் பகிர்ந்து கொண்டு உங்கள் வேலைக்கான பலனை எதிர்பார்க்காத நிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த நோக்கத்தின் இந்த பகுதி மிகமிக அமைதியாக நடைபெறவேண்டும். எனது அன்பு எனும் ஊற்று வெளிப்படும் உறுப்புக்களே நீங்கள் ஆணவத்தை வளர்த்துக்கொண்ட அடுத்த கணமே எனது வேலை நின்று விட்டதாக அறிந்து கொள்ளுங்கள். எதையும் பொருட்படுத்தாத மனநிலையை அடைந்தவுடன் எனது சக்தியாகவே ஆவீர்கள்

எனது இந்த பெருக்கப்பட்ட அன்பு இந்த உலகம் முழுதும் உணரப்படும். பல அவதாரங்களின் மூலம் நான் உங்களை இந்தப்பணிக்காக தயார் செய்திருக்கிறேன். நான் உங்களை என்பால் இழுத்திருக்கிறேன் எனது இந்த நோக்கத்திற்காகப் பல அவதாரங்களின் மூலம் பல நிலைகளைக் கடந்திருக்கிறேன். எனது பணி அழிவற்றது. உங்களது வேலையும் அவ்வண்ணமே முடிவற்றது. நான் உங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் இருப்பதை அறியுங்கள். இதில் ஒரு வேறுபாடும் இல்லை. சாதாரண விஷயங்களிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். நீங்களே நான் நானே நீங்கள் அனைவரும். இதில் ஒரு வேறுபாடும் இல்லை. எனது தரிசனம் உங்களால் உங்களுக்கு கிட்டும். இந்த தொடர்ச்சியான வேலையை நீங்கள் உணர மாட்டீர்கள். மனத்திலும். ஆத்மாவிலும் புனிதமாயிருங்கள். மனிதகுலமே உங்களது இந்த குணங்களால் மேம்பாடு அடையும்.

நான் அழைக்கும் போது மற்றவர்களும் என்னை அடைவார்கள் இவ்வுலகம் முழுதும் ஒற்றுமையாக வாழும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் எதிர்பார்ப்பதற்கு முன்பே அந்தகாலம் நெருங்கி வரும். படைப்பின் உண்மை நிலையை வாழுகின்ற அனைவருக்கும் உணர்த்த தேவையான எல்லா சாதனைகளுடன் நீங்கள் அனைவரும் அதற்காக தயாராக இருங்கள். அது ஒன்றும் நீங்கள் நினைத்து பார்க்க முடிகின்ற ஒன்று அல்ல. வேண்டக் கூடிய ஒன்றும் அல்ல. எல்லா வடிவங்களுக்கும். எதிர்பார்ப்புகளுக்கும் அப்பபாற்பட்டது. எல்லா கனவுகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு அழகு என்று மட்டும் உங்களுக்கு சொல்வேன். இந்த அமைதிப் பணியை நீங்கள் ஒவ்வொருவரும் செய்யும் போது நான் உங்களை என் இதயத்தில் அணைத்துக் கொள்வேன். இன்று முதல் உங்களது ஆன்மா உயரும். உங்களது கண்கள், நான் உங்கள் உள்ளேயே இருப்பதை வெளிக்காட்டும்.

அகிலம் முழுவதையும் ஒன்றாக்கும் இறைவனின் மலை உச்சியில் இருந்து இதை நான் எனது அன்பர்கள் அனைவருக்கும் உரைக்கிறேன்.

எனது அன்புக்குரிய பக்தர்களே. எனது வேலையில் ஈடுபடுங்கள். சொர்க்கத்தின் வாசனையை உங்களது மூச்சு எடுத்து செல்லட்டும். உங்களது செயல்பாடுகள் தேவதைகளின் செயல்களாகட்டும். உங்களது ஆனந்தமே எனது ஆனந்தம்.

***ஜெய் ஸ்ரீ ஸாயிராம்***

*பாபா*

பிரசாந்தி வீதி.
வவுனியா, இலங்கை
தொலைபேசி - 024- 22492
2-11-1998

**பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம்**

## சேவைப்பணி பற்றிய பகவான் சாயியின் அருள் வாக்குகள்

1. தேன் என்று சொன்னால் சுவைக்காது, உண்ண வேண்டும், சேவை என்று சொன்னால் போதாது, செய்ய வேண்டும்.

2. பிறருக்குச் சேவை செய்யும் கரங்கள் கடவுளைப் பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட மிகச் சிறந்தவை.

3. பிறருக்கு அன்பு செய், சேவை செய், அப்பொழுதே நீ என் அன்பைப் பெற முடியும்.

4. ஆண்டவன் கரங்களில் இயங்கும் கருவியாக இரு, அவரது விருப்பப்படி உன்னை அவர் சேவைக்குப் பயன் படுத்தவிடு.

5. ஊனமுற்றோருக்கு உதவுவது உனது கடமை. தியானம், ஜபம், செய்வதைவிட இது மேலான சாதனை.


6. பஜனை, தியானம், பூஜை இவைகளால் மோட்சம் பெற இயலாது. சேவையாலேயே செய்ய முடியும்.

7. சுயநலமற்ற சேவையே மனிதனைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்தி விடும்.

8. எல்லோருக்கும் சேவை செய். எல்லோரிடமும் அன்பு செலுத்து. எப்போதும் உதவு. ஒருபோதும் வருந்தாதே.

9. ஏழை, எளியவருக்குச் செய்யும் பூஜையே என்னை வந்து அடையும்.

*நீ புண்ணியம் செய்யாவிட்டால் போகிறது.*
*பாவம் செய்யாதிருந்தால் போதுமானது. – பாபா –*



சத்தியம்
தர்மம்
சாந்தி
பிரேமை
அகிம்சை

Rajeshwari Press (PVT) Ltd. 18, Prince Street Colombo -11, Tel : 324112, 329639